# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆனி 18 வியாழக்கிழமை (02-07-1998) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்:185

02 JUL 1998

# டக்ளஸின் உடல் நிலையில் மாற்றம் எதுவும் இல்லை

## செயற்கைச் சுவாசமே வழங்கப்படுகின்றது

கொழும்பு, ஜூலை 2

களுத்துறைச் சிறைச்சாலையில் வைத்து நேற்று முன்தினம் தாக்கப்பட்டுப் படுகாயம் அடைந்து கொழும்பு பொது வைத்தியசாலையில் அதி விசேட சிகிச்சைப் பிரிவில் உள்ள ஈ. பி டி. பி செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவின் நிலை தொடர்ந்தும் மோசமாக உள்ளதாக கொழும்பு ஆஸ்பத்திரி வட்டாரங்கள் நேற்று இரவு தெரிவித்தன,

நேற்று முன்தினம் இரவு தலையில் மூளைப்பகுதியில் நரம்பியல் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட அவருக்கு செயற்கைச் சுவாசம் வழங்கப்படுகிறது.

அவரின் உடல் நிலை குறித்த சரியான விவரத்தை நாளை காலையே தெரிவிக்க

(10ஆம் பக்கம் பார்க்க)

## டக்ளஸுக்கு இன்னும் நினைவு திரும்பவில்லை

கொழும்பு, ஜூலை 2

டக்ளஸ் தேவானந்தா இன்னமும் நினைவிழந்த நிலையில் கொழும்பு பொது மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருவதாக ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சிவதாசன் நேற்று இரவு பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறையில் இருந்த 54 தமிழ் கைதிகளும் இத்தகைய ஒரு செயலைச் செய்தார்கள் என்று நான் கூறவரவில்லை.

குறிப்பாக ஒரு சிலர் அதாவது நான்கு அல்லது ஐந்து கைதிகள் மாத்திரம் இந்தச் செயலைச் செய்தார்கள்.

அங்கு உள்ளவற்றைக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் சிறை அத்தியட்சகர் பதவி நீக்கம்

கொழும்பு, ஜூலை 2

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தாக்கப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக களுத்துறை சிறைச்சாலை அத்தியட்சகர் ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸால் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளைக் குழப்ப இவர் முயலக் கூடும் என்பதால் களுத்துறைச் சிறைச்சாலைக்குச் செல்லக் கூடாது என்று அவருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தேவானந்தா உண்ணாவிரதிகளுடன் கலந்துரையாடி நிலத்தில் அவர்களுடன் உட்கார்ந்து இருந்து குளுக்கோஸ் வழங்கி உண்ணாவிரதத்தை முடிக்க ஏற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மசகு எண்ணெய் கடல் நீருடன் கலந்தது

### கொழும்புத் துறைமுகத்தில்

கொழும்பு, ஜூலை 2

கொழும்புத் துறைமுகத்தில் கப்பலில் இருந்து எண்ணெயை இறக்கும் போது ஏற்பட்ட கசிவு காரணமாக சுமார் 75 தொன் மசகு எண்ணெய் கடல் நீருடன் கலந்து விட்டது.

கிறீஸில் பதிவு செய்யப்பட்ட இந்தக் கப்பல் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு எண்ணெயை இறக்கிக் கொண்டிருந்த சமயம் நேற்று அதிகாலை 5-00 மணிக்கு இந்தச் சம்பவம் நடந்தது.

கொழும்புக் கோட்டையில் இருந்து பம்பலப்பிட்டி வரையிலான கரையோரப் பகுதியில் இப்போது எண்ணெய் பரவி இருக்கின்றது.

எண்ணெய்க் கசிவு ஏற்படுவதைக் கண்டு பிடித்ததும்

(10 ஆம் பக்கம் பார்க்க)



அப்ப இது உண்ணாவிரத ''சீசன்'' போல...!

## புல்லாவெளியில் டாங்கி எதிர்ப்புக் கண்ணி

கிளிநொச்சி மாவட்டத்தில் புல்லாவெளி என்னும் இடத்தில் நேற்று முன்தினம் காலை 10.15 மணியளவில் படையினர் வீதித் துப்பரவுப்பணியில் ஈடுபட்டிருந்த சமயம் டாங்கி எதிர்ப்புக்கண்ணி ஒன்றைக் கைப்பற்றினர் என்று பலாலி இராணுவத் தலைமையகச் செய்தி தெரிவித்தது.

பின்னர் அந்தக் கண்ணி செயலிழக்கச் செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## மேஜர் ஜெனரல் பதவியில் சரத் முனசிங்க

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க மேஜர் ஜெனரலாக நேற்று பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இராணுவத் தரப்புச் செய்திகளை வெளியிடும் பேச்சாளராக இவர் நீண்டகாலம் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## இரண்டாவது நாளாக கிழக்கில் உண்ணாவிரதம்

### இன்றுமுதல் சுழற்சி முறையில்

திருகோணமலை, ஜூலை 2

கிழக்கிலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் நேற்று இரண்டாவது நாளாகவும் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டது.

திருகோணமலை உள்துறைமுக வீதியில் உள்ள மாகாணக் கல்வியமைச்சு அலுவலகத்துக்கு முன்பாக நேற்றும் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் சுமார் 200 வேலையற்ற பட்டதாரிகள் பங்குபற்றினர்.

''ஆசிரியர் நியமனத்தை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக தமக்கு வழங்க ஜனாதிபதி அல்லது கல்வியமைச்சர் உறுதிமொழி வழங்கவேண்டும்'' என்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். சிறைச்சாலையிலும் மூவர் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

தம்மை விடுதலை செய்யக் கோரி யாழ். சிறையில் மூன்று சிங்களக் கைதிகள் நேற்று முன்தினம் தொடக்கம் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

சி. வலிசுந்தர, ம. அருணசாந்த, வகர. நிரோசன் ஆகிய இம் மூவரில் இருவர் மல்லாகம் நீதிமன்ற வழக்கு ஒன்றில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள். மற்றவர் பருத்தித்துறை நீதிமன்ற வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர். இந்தக் கைதிகளின் உடல் நிலை குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரை சிறைச்சாலை ஆணையாளர் கோரி இருப்பதாகத் தெரிய வருகிறது.

(இ–139–15)

## புறக்கோட்டைப்பகுதியில் நேற்றிரவு சுற்றிவளைப்பு

கொழும்பு, ஜூலை 2

கொழும்பு புறக்கோட்டை பகுதி நேற்றிரவு 10–30 மணியளவில் பொலீஸாராலும், படையினராலும் சுற்றி வளைக்கப்பட்டு தமிழர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு கைதானவர்கள் பஸ்கள் மூலம் வேறு ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும்—

அப்பகுதியில் உள்ள கடைகளில் பணிபுரியும் தமிழ் இளைஞர்களே அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நள்ளிரவுவரை இத் தேடுதல் தொடர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம்– கடந்த 29 ஆம் திகதி செட்டியார் தெரு ஜிந்துப்பிட்டிப் பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ள குணசிங்கபுராப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்ட சுமார் 3 ஆயிரம் பேரில் 34 பேர் நேற்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படை - புலிகள் புங்குடுதீவில் மோதல்!

யாழ்ப்பாணம், ஜூலை 2

புங்குடுதீவில் நேற்று முன்தினம் மாலை 6–30 மணியளவில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாகப் பலாலி இராணுவ தலைமையகச் செய்திக்குறிப்பு தெரிவித்தது.

தேடுதலில் ஈடுபட்ட கடற்படையினர் மீது விடுதலைப் புலிகள் சிறு ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்தியதாகவும் —

பின்னர் கடற்படையினர் பதில் தாக்குதலை நடத்தியதாகவும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

சண்டையின் பின்னர் விடுதலைப் புலிகள் பின்னே சென்றுவிட்டதாகவும்—

சுமார் 20 க்கும் 25 க்கும் இடையில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இறந்தோ அல்லது காயப்பட்டோ இருக்கலாம் என கடற்படையினர் மதிப்பிட்டுள்ளனர் என்றும்— மேலும் அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி புனிதவதி நல்லதம்பி

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த திருமதி புனிதவதி நல்லதம்பி அவர்கள் 01-07-1998 புதன்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
லயன் அ. நல்லதம்பி (கணவர்)
(உபதலைவர் T.R.R.O.)

உரும்பிராய் மேற்கு,
மானிப்பாய் வீதி,
உரும்பிராய். (67677)

## சோமசுந்தரம் ஸ்ரீமோகன்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சோமசுந்தரம் ஸ்ரீமோகன் அவர்கள் திங்கட்கிழமை (29 – 06 – 98) அன்று யாழ்ப்பாணத்தில் அகால மரணமானார்.

அன்னார் சோமசுந்தரம் (இளைப்பாறிய லிகிதர் இந்துக் கல்லூரி, வைத்தீஸ்வராக் கல்லூரி, ஒஸ்மேனியாக் கல்லூரி), நித்தியலட்சுமி ஆகியோரின் அன்பு மகனும், ஸ்ரீரங்கநாயகி (ரதி) (ஆசிரியை, பாத்திமா முஸ்லிம் பெண்கள் மகா வித்தியாலயம், கொழும்பு – 12), ஸ்ரீதரன் (லண்டன்), ஸ்ரீபதி (பிரான்ஸ்), ஸ்ரீகாந்தன் (பிரான்ஸ்), ஸ்ரீபாலன் (பிரான்ஸ்), ஸ்ரீநாதன் (லண்டன்), ஸ்ரீசாந்தநாயகி, வசந்தி (பரீட்சைச் இளை, கொ / பலகலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஸ்ரீசற்குருநாதன் (ஓமான்), மாலதி (லண்டன்), ஜெயலலிதா (பிரான்ஸ்), நீலகேசி, நந்தினி (பிரான்ஸ்), ஸ்ரீஅனுசியா, கெங்கேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஸ்ரீமாதங்கியின் அன்பு மாமனாரும், ஸ்ரீவிதுயா, ஸ்ரீவாகீசன், ஸ்ரீவிபூசா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 02 – 07 – 1998 இன்று வியாழக்கிழமை காலை 10,00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக (198/5, பொன்னப்பா லேன், யாழ்ப்பாணம்) அன்னாரின் இல்லத்திலிருந்து கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. க. சோமசுந்தரம்

198/5, பொன்னப்பா லேன்,
யாழ்ப்பாணம். (57289)

திருமதி

## செல்லத்துரை தங்கமுத்து

சொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தில் வசித்தவரும், தற்போது புத்தூர் மேற்கில் வசித்தவருமாகிய திருமதி செல்லத்துரை தங்கமுத்து 01. 07. 98 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லத்துரையின் (ஆசிரியர்) அன்பு மனைவியும், தியாகராசாவின் (விரிவுரையாளர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை பலாலி) அன்புத்தாயாரும், மகாதேவி, கமலநாயகி (ஆசிரியை, கிளிநொச்சி மகாவித்தி), கமலவேணி (ஆசிரிய மாணவி, ஆசிரிய கலாசாலை- கோப்பாய்), ஆகியோரின் அன்பு மாமியாரும், மூர்த்தியின் சிற்றன்னையும், தாட்சாயணி, கங்காசுதன், துவாரகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.07.98 வியாழக்கிழமைபுத்தூர் மேற்கில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1-00 மணிக்குபுத்தூர் மேற்கு குடும்ப மயானத்திற்குஎடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
செ. தியாகராசா

புத்தூர் மேற்கு,
புத்தூர். (57299)

## தில்லைநாதன் ஐயர் விமலேந்திரன் ஐயர்

(நாயன்மார்கட்டு)

மண்கும்பான் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட சதாசிவ ஐயர் தில்லைநாதன் ஐயரின் மகன் விமலேந்திரன் ஐயர் (பிரபல சாற்றுப்படி அலங்காரப் பந்தல் அமைப்பாளர்) 30–06–98 இல் கொழும்பில் காலமானார்.

இவர் தில்லைநாதன் ஐயர்—சரஸ்வதிதேவி தம்பதிகளின்பாசமிகு மகனும், திருமதி சதாசிவம் ஐயர்—அன்னலக்ஷ்மியின் அன்புப் பேரனும், ரஜீந்திரன் ஐயர், அழகேசக் குருக்கள், சுரேந்திரன் ஐயர், கேசவன் ஐயர், காலஞ்சென்ற குலேந்திரன், இந்திரன் ஆகியோரின் சகோதரனும், புவனேஸ்வரி, அனுஷா ஆகியோரின் மைத்துனரும், சுதர்சன், வட்சலா, சுகிர்தன், அமிர்தன் ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும், காலஞ்சென்ற தி. இராசலட்சுமி, சண்முகநாதக் குருக்கள், புவனேஸ்வரி, கணநாதன் ஐயர் பாலாம்பிகை ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற பாலசுந்தரக் குருக்கள் செல்லம்மா, காலஞ்சென்ற சண்முகானந்தம் இலக்ஷ்மிதேவி, காலஞ்சென்ற செந்தில்நாதன் சற்குணதேவி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிககிரியைகள் இல. 14, பண்டாரநாயக்க மாவத்தை, களுபோவில தெஹிவளை இல்லத்தில் (04—07—1998) சனிக்கிழமைகாலை 10.00 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்;
தி. அழகேசக் குருக்கள்
(சகோதரன்)

38, அரசடிப்பிள்ளையார் கோயில் வீதி,
நாயன்மார்கட்டு,
நல்லூர். (57300)

## கருவாடு விலை உயர்வு

யாழ். நகர்ப்பகுதியில் கருவாட்டின் விலை அதிகரித்துள்ளது.

தீவுப்பகுதியில் இருந்து கருவாடு யாழ்ப்பாணம் எடுத்துவரப்படாததே விலை உயர்வுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது யாழ். கரையோரப் பகுதிகளிலும் மற்றும் வடமராட்சிப் பகுதிகளிலுல் பதனிடப்படும் கருவாடுகளே கூடுதலாக நகரில் விற்கப்படுகின்றன.

(ஐ – 17)


## விற்பனைக்கு

HONDA
ஜெனரேட்டர்
K. V: 1200 (Japan)
8 அடி DISH அன்ரனா
U. S. A.
தொடர்பு:
மூர்த்தி
வீடியோ சென்ரர்
சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.
(மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்பாக)
(57284)

## விக்னா கல்வி நிறுவனம்

O/L பிரத்தியேக
கணித வகுப்பு
SAT, SUN. 3. 15 to 5. 15
பகுதி 11 அலகு ரீதியானது.
Wednesday 3-4. 30
பகுதி 1 அலகு ரீதியானது
புதிய பிரிவு ஆரம்பம்.
★ கடந்தகால வினாக்கள் இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.
C. K. B. தயாளன்
(57290)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்;
அகல வெண் திரையில்
2 முதல் 3 வரையும்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா நடித்த
ரகசிய பொலீஸ் 115
CD வெளியீடு
காட்சிகள்:- 10-30, 2–30
(57295)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.
இன்று மட்டும்
ராஜேந்தர் - மைதிலி
மைதிலி என்னைக் காதலி
வெள்ளி முதல்
அனேக ரசிகர்களின்
வேண்டுகோளுக்கிணங்க
ஸ்ரீபிரியா - கமல்
விஜயகுமார் - லதா
நீயா
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070 - 212223
(57176)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.
கடைசி வாரமாக
ரஜனி - நக்மா
ரகுவரன், ஜனகராஜ்
நடித்த
பாட்ஷா
அடுத்த வெளியீடு!
சத்ரிய வம்சம்
தினசரி
10-30 – 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/3917)

## JEYAA LADIES ACADEMY

519, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
ஆரம்பம்: 11 - 07 - 1998
ஆசிரியை: திருமதி கௌரி வேல்சாமி
ஐசிங், தலை அலங்காரம், தையல், கோலம், வர்ணம் தீட்டல், பூவேலை, சிற்றுண்டிகள்.
ENGLISH: G. C. E. O/L
முன் கூட்டியே பதிவுகளைச் செய்யவும்.
(57292)


## யாழ். மாநகர சபை

# கேள்வி அறிவித்தல்:

### நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவகால தற்காலிகக் கடைகள் — 1998

1. நல்லூர் இந்து விடுதிக்கு மேற்குப் பக்கமாகவும் தெற்குப் பக்கமாகவும்.
2. பண்டார மாளிகை வளவில் மாநகரசபை அலுவலகத்திற்கு மேற்குப்பக்கமாகவும் கிழக்குப் பக்கமாகவும்.

கச்சான் கடலைக்கடைகள், மணிக்கடைகள், ஐஸ்கிறீம் கடைகள், ஐஸ்கிறீம் வாகன நிலையங்கள், இதர கடைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கான நிலங்களைக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்விகள் 16–7–98 வியாழக்கிழமை பிற்பகல் 12. 30 மணி வரை (இலங்கை நேரம்) என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இதற்கான கேள்விப்படிவங்களை மீளளிக்கமுடியாத கேள்விப் படிவக்கட்டணம் 100 ரூபாவும், மீளளிக்கக்கூடிய கேள்விப்பிணை 1000 ரூபாவும் செலுத்துவதன்பேரில் 15–7–98 புதன்கிழமை பிற்பகல் 3. 30 வரை (இலங்கை நேரம்) யாழ். மாநகர சபையின் நானாவித இறைவரிக்கிளையில் பெற்றுக் கொள்ளமுடியும்.

பூர்த்தி செய்த கேள்விகள் இணைப்பிரதிகளுடன் சீல்வைத்த உறையிலிட்டு "………… க்கான கேள்வி" என எழுதப்பட்டு 16–7–98 பிற்பகல் 12. 30க்கு முன் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விகள் தபாலில் அனுப்பப்படுமாயின் தாமதங்களுக்கு மாநகரசபை பொறுப்பேற்கமாட்டாது.

கேள்விகள் 16–7–98 பிற்பகல் 2. 00 மணிக்கு (இலங்கை நேரம்) திறந்து ஆராயப்படும், அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதி பிரசன்னமாக இருக்கலாம்.

மேலதிக விவரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிக்கிளையில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளமுடியும். வரைபடத்தையும் பார்வையிடலாம்.

குறிப்பு:
மேறபடி சந்தைப்பகுதியில் அனுமதிக்கப்படும் கடைகள் தவிர 10–7–98 க்கு முன் விண்ணப்பித்து முன்கூட்டியே அனுமதிபெற்றிராத எந்தத் தற்காலிக வியாபாரமும் திருவிழாக் காலத்தில் நடத்த அனுமதிக்கப்படமாட்டாது.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
18–6–1998 (சி/4164)

# மரண அறிவித்தல்

## ஆறன் சின்னத்தம்பி

ஆவரங்கால் சர்வோதயா வீதியைப் பிறப்பிடமாகவும் அதே இடத்தை வதிவிடமாகவும் கொண்ட ஆறன் சின்னத்தம்பி அவர்கள் 01–07–98 புதன்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் சி. நல்லம்மா அவர்களின் அன்புக் கணவரும், சி. தவராஜா (கனடா) சி. ஜெசிந்தா (கனடா), சி. பத்மநாதன், சி.ஜெயமாலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நேற்று பி.ப 4,00 மணிக்கு கொல்லன்பனைமயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்;
சி. பத்மநாதன்
(மகன்)

சர்வோதயா வீதி,
ஆவரங்கால். (57297)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கிய விமான எதிர்ப்புத் தளம் மீது

# அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல்!

## திடீர் நடவடிக்கையால் பதற்றம்!!

வாஷிங்டன், ஜூலை 2

**ஈராக்கிய விமான எதிர்ப்பு ஏவுகணைத் தளம் ஒன்றின் மீது அமெரிக்காவின் போர் விமானம் ஒன்று ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாகப் 'பென்ரகன்' அறிவித்துள்ளது.**

தெற்கு ஈராக்கில் விமானங்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்ட வான் பகுதியில் வழமையான ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த நான்கு பிரிட்டிஷ் விமானங்களைத் தாக்க ஈராக்கிய தளம் ஒன்றில் இருந்து இலக்கு வைக்கப்பட்டதை அடுத்தே இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.


ஈராக்கிய விமான எதிர்ப்பு ஏவுகணைத் தளம் ஒன்றில் இருந்து பிரிட்டிஷ் விமானங்களின் ''ராடார்'' கருவியுடன் தொடர்பு கொண்டு குறிவைக்கப்பட்டதும் அந்த பிரிட்டிஷ் விமானங்கள் அது குறித்து அமெரிக்க விமானப் படைக்குத் தகவல் கொடுத்துவிட்டு பாதுகாப்பாகத் தளம் திரும்பின என்றும் —

அதனையடுத்து அமெரிக்க போர் விமானம் ஒன்று அந்த ஏவுகணைத் தளம் மீது ஏவுகணை ஒன்றை வீசித் தாக்கியது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இத் தாக்குதலுக்கு ஈராக்கிடமிருந்து உடனடியாக எந்த பதில் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அமெரிக்காவின் தாக்குதலால் ஏற்பட்ட சேதங்கள் குறித்தும் தகவல் வெளியிடப்படவில்லை.

அமெரிக்காவின் இந்நடவடிக்கை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாதது என்று ஈராக் குற்றஞ்சாட்டியது. (ஐ)

# இரு தலைகளுடன் பெண் குழந்தை!



ஹோ-சி-மின் - ஜூலை 2

இரண்டு தலைகளையுடைய பெண் குழந்தை ஒன்று வியட்னாமின் ஹோ-சி-மின் நகரில்பிறந்துள்ளது.

நகர ஆஸ்பத்திரி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் தற்போது தீவிர மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ள இக்குழந்தையின் நிறை 1.8 கிலோ கிராம்களாகும்.

இரு தலைகளையுடைய இக்குழந்தைக்கு தலைக்குக் கீழே உள்ள முண்டப் பகுதியில் இரு இருதயங்களும் உள்ளன.

ஹோ—சி—மின் நகரில்இருந்து 80 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தியன் ஜியாங் மாகாணத்தில் வசிக்கும் ஒரு வறிய விவசாயக் குடும்பத்தினருக்கே இக் குழந்தை பிறந்துள்ளது. (ஐ)

(ஏ-ஏப்-பி)

# இந்தியா மீது அணு ஆயுத தாக்குதல் நடத்த பாகிஸ்தான் திட்டமிட்டது?

## விஞ்ஞானிகள் ஐவர் அதிர்ச்சித் தகவல்

லண்டன, ஜூலை. 2


பாகிஸ்தானில் அணு ஆயுதத் திட்டத்தோடு சம்பந்தப்பட்ட 5 விஞ்ஞானிகள் நாட்டைவிட்டு வெளியேறி பிரிட்டனில் அரசியல் புகலிடம் கோரியிருப்பதாக லண்டனில் வெளியாகும் 'ஒப்சேர்வர்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தியா மீது அணு ஆயுதத் தாக்குதலொன்றை நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தன்னை பாகிஸ்தான் அரசாங்கம் கேட்டுக் கொண்டதாக இந்த விஞ்ஞானிகளுள் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பல இந்திய இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்துவதற்கான தரவுகளை வழங்குமாறும் அதிகாரிகள் கேட்டதாக இந்தக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா அணு சோதனைகளை நடத்தி இரு வார காலத்துக்குள் பாகிஸ்தானும் அணு சோதனைகளை நடத்தியது. இந்த இடைக் காலப் பகுதியிலேயே தாங்கள் இவ்வாறு கேட்டுக் கொள்ளப்பட்டதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

இந்த விஞ்ஞானிகளின் தனிப்பட்ட பாதுகாப்புக் கருதி அவர்கள் பற்றிய விவரங்களை வெளியிடவில்லை என 'ஒப்சேர்வர்' பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.



காஷ்மீர் எல்லைக் கோட்டுப் பகுதியில் எதிரி நிலைகளை நோக்கி இலக்கு வைத்து காத்திருக்கும் இந்திய ஜவான்கள். (ஐ)

**உலக அரங்கில்**

இவர்களுள் மிக சிரேஷ்ட விஞ்ஞானியின் மனைவி தற்போது கராச்சியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும்—

சொந்தப் பாவனைப் பொருள்கள் கூட இல்லாத நிலையில் இந்த விஞ்ஞானிகள் நாட்டை விட்டு வெளியேறி இருப்பதாகவும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை—

பிரிட்டிஷ் பத்திரிகையில் வெளியான இந்தச் செய்தியை பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

பாகிஸ்தானில் இருந்து விஞ்ஞானிகள் வெளியேறி இருப்பது பற்றியோ, அல்லது அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வேறு தகவல்கள் பற்றியோ தனக்கு எதுவும் தெரியாது என்று பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-8)

# இந்திய- பாகிஸ்தான் எல்லையில் மோதல்கள்

## மக்கள் இடம் பெயர்வு

புதுடில்லி, ஜூலை 2

இந்திய - பாகிஸ்தான் இடையிலான காஷ்மீர் எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டுப் பகுதியில் இரு நாட்டு படைகளும் தொடர்ந்து தாக்கி வருகின்றன.

பாகிஸ்தான் படைகள் நடத்திய ஷெல் வீச்சினால் கார்ட்வில் பகுதியில் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாகஅரசஅதிகாரி ஒருவர்தெரிவித்தார்.

இந்திய எல்லைக் கிராமங்களில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. (ஐ-8)

# ரீ. வி.மீதான தடை! பூட்டானில் தளர்வு

திம்பு, ஜூலை 2

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியைப் பூட்டான் மக்கள் பார்த்து ரசிப்பதற்காகத் தொலைக்காட்சி ஒளிபரப்புகள் மீதான தடையைப் பூட்டான் அரசு தளர்த்தியுள்ளது.

இதனையடுத்து தலைநகர் திம்புவிலும், நாட்டின் இதர மூன்று இடங்களிலும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி பெரிய தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்பப்பட்டுவருகின்றன. பூட்டான் ஒலிம்பிக் சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

புத்தமதக் கொள்கையின்படி வாழ்க்கை நடத்திவரும் பூட்டான் மக்களை தொலைக்காட்சி ஒளி பரப்புகள் திசை திருப்பிவிடும் என்ற காரணத்துக்காக பூட்டான் அரசு தொலைக் காட்சிகளைத் தடைசெய்துள்ளது.

தற்போது தளர்த்தப்பட்டுள்ள இத் தடை உலகக் கிண்ண உதைபந்தாட்டம் முடிந்ததும் மீண்டும் முற்றாக அமுல் செய்யப்படும்.

பூட்டான் மன்னர் ஓர் உதைபந்தாட்ட ரசிகர் என்பதாலேயே மக்களுக்கு இந்த வாய்ப்புக் கிட்டியிருக்கிறது. (ஐ-10)

# கோபி அனான் நைஜீரியாவில்

ஐ. நா. செயலாளர் நாயகம் கோபி அனான் மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு நைஜீரியா சென்றுள்ளார்.

மூன்று நாள்கள் அங்கு தங்கவுள்ள அவர் நைஜீரியாவின் புதிய அதிபர் அப்துல்சலாம் அபூபக்கரை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். (ஐ)

# இந்தியாவில்புதிய 3 மாநிலங்கள்!

## டில்லிக்கு மாநில அந்தஸ்து

புதுடில்லி, ஜூலை 2

இந்தியாவில் புதிதாக மூன்று மாநிலங்களை அமைப்பதற்கான முன் ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக ஆளும் பாரதிய ஜனதாக் கூட்டணி அரசு அறிவித்துள்ளது.

தற்போது யூனியன் பிரதேசமாக உள்ள புதுடில்லிக்கு முழு மாநில அந்தஸ்து வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உத்தர்கண்ட் (UTTARAKHAND), வனான்சல் (VANANCHAL), சட்டிஸ்கர் (CHATTISGARH) ஆகிய மாநிலங்களே புதிதாக அமைக்கப்படவுள்ளன.

இந்த மாநிலங்களைப் புதிதாக அமைப்பது தொடர்பான அரசின் கொள்கை ரீதியான முடிவு அமைச்சரவையின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

தற்போது யூனியன் பிரதேசமாக உள்ள பாண்டிச்சேரிக்கும் மாநில அந்தஸ்து வழங்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

வட இந்திய மாநிலமான உத்தரப் பிரதேசத்தின் இமாலயப் பகுதியில் புதிய உத்தர்கண்ட்மாநிலம் அமையவுள்ளது.

தீவிரவாத கிளர்ச்சி நடைபெறும் மத்தியப் பிரதேச மாநிலத்தில் புதிய சட்டிஸ்கர் மாநிலமும், மத்தியப் பிரதேசம், ஒரிஸா, பீஹார் ஆகிய மாநிலங்களின் பகுதிகளை உள்ளடக்கி வனாச்சல் மாநிலமும் அமையவுள்ளன.

இந்தியாவில் தற்போது 26 மாநிலங்கள் உள்ளன. எல்லா மாநிலங்களிலும் மாநில ஆட்சி நடைபெறுகிறது. பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு, தொலைத்தொடர்பு ஆகிய துறைகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. (ஐ)

# கணனிகளில் ஏற்படும் 'வை 2 கே' பிரச்சினை

## தீர்வுக்கு ஐ. நா. தலையீடு

நியூயோர்க் ஜூலை 2

2 ஆயிரமாம் ஆண்டில் கணனிகளில் ஏற்படவுள்ள 'வை 2. கே.' பிரச்சினையைத் தீர்க்க சகல உறுப்பு நாடுகளும் ஒத்துழைக்க வேண்டும். என்று ஐக்கிய நாடுகள் சபை கேட்டிருக்கிறது. இதற்காக தேசிய ஒருங்கிணைப்பாளர்களை நியமிக்குமாறும் கோரப்பட்டிருக்கிறது.

கணனிகளில் ஆண்டுகளைக் குறிக்க கடைசி இரு இலக்கங்கள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. 1998 ஆம் ஆண்டு என்பது '98' என்றே கணனியில் குறிப்பிடப்படுகிறது. எனவே 2 ஆயிரமாம் (200.) ஆண்டு என்பதை '00' என்றே கணனி குறிப்பிடும். ஆனால் இங்குதான் பிரச்சினையே இருக்கிறது. '00' எனக் குறிப்பிடுவது 1900 ஆம் ஆண்டையா அல்லது 2,000 ஆம் ஆண்டையா என்ற குழப்பம் அடுத்த நூற்றாண்டு பிறக்கும் போது ஏற்படும்.

கணனி மென்பொருளில் ஏற்படவுள்ள இப்பிரச்சினையே 'வை 2 கே' எனப்படுகிறது,

இப் பிரச்சினையைத் தீர்க்க உலக அளவில் இணைந்த கூட்டுமுயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விஞ்ஞானிகளும், பொறியியலாளர்களும் தீவிர ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Sharp – 7750SF பாவித்த போட்டோப் பிரதி இயந்திரமும், புத்தம் புதிய உதிரிப் பாகங்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: எஸ். கிருபாகரன், அரசடி வீதி, தாவடி. [57268]

### O/L MATHS

ஆரம்பத்திலிருந்து இது வரையும் பெறுபேறடையாதவர்கள் Credit, Distinction பெறுபேறடைய 15 வருடங்கள் O/L விடைத்தாள்கள் திருத்திய அனுபவமுள்ள ஆசிரியரால் கற்பிக்கப்படுவர் 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [57280]

### மணமகள தேவை

சொந்த வியாபார ஸ்தாபனத்தை நடத்தும் 36 வயதுடைய மூல நட்சத்திரம் செவ்வாய் தோஷமுடைய மணமகனுக்கு பெற்றோர் அழகிய கௌரவ இந்து குடும்பத்தைச் சேர்ந்த மணப்பெண்ணைத் தேடுகின்றனர். இல. 754, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [57282]

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 31 வயதுடைய அரச திணைக்களத்தில் பொறுப்பு வாய்ந்த பதவியில் கடமையாற்றும் மணமகனுக்கு பெற்றோர் அழகிய மணப் பெண்ணைத் தேடுகின்றனர். இல. 754, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [57281]

### தவறிவிட்டது

மீசாலை வடக்கைச் சேர்ந்த கனகரத்தினம் ரவீந்திரன் ஆகிய எனது 811680834 இலக்க அடையாள அட்டையும், 091035816 இலக்க விசேட அடையாள அட்டையும் வேம்பிராய்க்கும கேணியடிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் ஒப்படைக்கவும். [சி/4151]

நல்லதம்பி அச்சுதானந்தன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் (490940332V), விசேட அடையாள அட்டையும் சித்தன் கேணிக்கும், சங்கானைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து லீலா பேக்கரி, சங்கானையில் ஒப்படைத்து உதவவும். [57273]

### வகுப்புக்கள்

தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்புக்கள் 04-07-98 சனிக்கிழமை அன்று ஆரம்பம். தொடர்பு: R. சாயி 116, பலாலி வீதி (கராச் அருகில்) கந்தர்மடம், யாழ்ப்பாணம். [57275]

### திருமணசேவை

எங்கள் அலுவலகம் இப்போது சியாமளா மில் புத்தூர்ச் சந்தியில் இயங்குகின்றது. எங்களிடம் அரச தொழில், தனியார் தொழில் வெளிநாடு ஆகியோர்களின் சாதகங்கள் உண்டு. வே. புண்ணியமூர்த்தி, எம். ஜி. ஆர். அகம் கண்டி வீதி, புத்தூர்ச்சந்தி, மீசாலை. [57253]

# மீள் கேள்வி அறிவித்தல்

**நல்லூர்ப் பிரதேச சபை, திருநெல்வேலி**

கீழ்க் குறிப்பிடப்பட்ட இறைச்சிக்கடைகளை **15-07-98** தொடக்கம் **31-12-98** வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

1) கேள்விப்பத்திர விநியோகம் - 08 - 07 - 98 புதன்கிழமை பிற்பகல் 1. 00 மணி வரை.

2) கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதியும் நேரமும் 10 - 07 - 98 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12. 00 மணிவரை.

3) கேள்வி திறக்கும் திகதியும் நேரமும் 10 - 07 - 98 காலை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3. 00 மணி

இக் கேள்வி தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம். ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.

பொ. வைரமுத்து
செயலாளர்.
நல்லூர்ப் பிரதேச சபை.

நல்லூர்ப் பிரதேச சபை,
திருநெல்வேலி.
30 – 06 – 98.

| இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த தொகை |
|---|---|---|---|
| 1) திரு. சந்தை ஆட்டிறைச்சிக்கடை கடை இல. 11 | 250/- | 3,000/- | 29,000/- |
| 2) கொக்குவில் உப-அலுவலக ஆட்டிறைச்சிக் கடை | 250/- | 3,000/- | 17,425/- |
| 3) ஆடியபாதம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 250/- | 3,000/- | 23,100/- |

(கி-4159)

# நினைவஞ்சலி

**38ஆம் ஆண்டு** **8ஆம் ஆண்டு**





அமரர்
**நாகலிங்கம் திருஞானசம்பந்தர்**
(முன்னாள் ஆசிரியர், மீசாலை வீரசிங்கம் சைவ வித்தியாசாலை)
தோற்றம் 22 - 07 - 1913 மறைவு 02 - 07 - 1960

திருமதி
**திருஞானசம்பந்தர் யோகாம்பிகை**
(இளைப்பாறிய ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்)
தோற்றம் 23 - 08 - 1920 மறைவு 01 - 07 - 1990

திதி. 02 – 07 – 1998

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்

மீசாலை.

# வட மாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

( மட்டு )

## பதவி வெற்றிடம்

கீழ்க்காண் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஆண் பாலாரிடமிருந்து கோரப்படுகின்றன.

வயது: **18** முதல் **45** வருடங்கள் வரை.
(கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிப்போர் தத்தம் சங்கத்தினூடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். )

*விண்ணப்ப முடிவு திகதி:* **10–07–1998**

சமாசத்தால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவிப் பெயரையும் குறிப்பிட்டு " தலைவர், வட மாகாண தெ. ப.பொ. கூ. ச. சமாசம், இல. 52, சோமசுந்தரம் ஒழுங்கை, சுண்டுக்குளி " என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

### கணக்குப் பதிவாளர்

சம்பள அளவுத்திட்டம்:
165/88 - 10 - 3100-4900
80x10-100x10
(31/97 இல. சுற்று நிருபம்)

*தகைமைகள்:*

அ) கூட்டுறவு வேலையாளர் ஆணைக் குழுவின் 165/88 - 11 ஆம் இலக்க சம்பளத் திட்டத்தில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவமுள்ள க/கு பதிவாளர் அல்லது கணக்காய்வு இலிகிதர் அல்லது 165/88 – 12 ஆம் இலக்க சம்பள அளவுத் திட்டத்தில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவமுள்ளவர்.

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சியத்தின் க/கு பதிவாளர் நிறுவன இறுதிப் பரீட்சையை நிறைவு செய்தும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனத்தின் க/கு வேலைகளில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும், அல்லது ஐக்கிய இராச்சியத்தின் க/கு பதிவாளர் நிறுவன இடைநிலைப் பரீட்சையை நிறைவு செய்தும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனத்தின் க/கு வேலைகளில் 4½ வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் உள்ளவர்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர (உயர் தரம்) சான்றிதழ்/ க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் கணக்கியல் உட்பட 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனத்தின் க/கு வேலைகளில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம் உள்ளவர்கள்.

### பொது இலிகிதர்:

சம்பள அளவுத் திட்டம்:
165/88 - 11 — 2950 – 4700
75x10 – 100x10
(31/97 இலக்க சுற்றுநிருபம்)

*தகைமைகள் :*

அ) கூ. வே. ஆணைக்குழுவின் 165/88 – 12 ஆம் இலக்க சம்பளத் திட்டத்தில் 2 வருடங்களுக்கு குறையாத க/கு பதிவாளர், இலிகிதர் பதவியிலான அனுபவமுள்ளவர் அல்லது கூ. வே. ஆணைக்குழுவின் 13ஆம் இலக்க சம்பளத்திட்டத்தில் 4 வருடங்களுக்குக் குறையாத ஒத்த பதவியிலான அனுபவமுள்ளவர்.

அல்லது

ஆ) ஐக்கிய இராட்சியத்தின் க/கு பதிவாளர் நிறுவன இடைநிலைப் பரீட்சையை நிறைவு செய்தும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனத்தின் க/கு தொடர்பான வேலைகளில் 4 வருடங்களுக்குக்குறையாத அனுபவமுள்ளவர்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர (உயர் தரம்) சான்றிதழ்/ க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனத்தில் க/கு இலிகிதர், இலிகிதர் பதவியில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவமுள்ளவர்.

தலைவர்
வடமாகாண
தெ. ப. பொ. கூ. ச. சமாசம்.

(சி-4160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை:

# தகுதியுடைய சகல மாணவரையும் பரீட்சைக்கு அனுமதிக்க வேண்டும்

## அதிபர்களுக்கு கண்டிப்பான உத்தரவு

வலிகாமம் தெற்கு, ஜூலை 2

ஐந்தாம் ஆண்டு மாணவர்களின் புலமைப்பரிசில் பரீட்சை சம்பந்தமாக கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய தகுதியுடைய சகல மாணவர்களையும் பரீட்சைக்கு அனுமதிக்க வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சார்பாக உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. வரதசீலன் பாடசாலை அதிபர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பரீட்சைக்கு மாணவர்களை அனுமதிப்பது என்பது பரீட்சைக்கு மாணவர்களை விண்ணப்பிக்கச் செய்வது மட்டுமல்ல; பரீட்சை வரை அவர்களை ஊக்குவித்து விண்ணப்பித்த அனைவரையும் பரீட்சை எழுத தகுதியுடையவர்களாக்குவது என்பதை அதிபர்கள், ஆசிரியர்கள் உணர வேண்டும்.

இதற்கு முரணாக நடந்து கொள்ள முயலும் ஆசிரியர்கள், அதிபர்கள் கண்டறியப்பட்டு நிரூபிக்கப்படுமிடத்து அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

விண்ணப்பங்களை அனுப்பும் போது தமது பாடசாலை விகிதாசாரத்தைப் பேணும் வகையில் விண்ணப்பங்கள் அனுப்பப்படுவதாக எமது கவனதுக்குக்கொண்டு வரப்பட்டுள்ளது. இது மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றும் உரிமையை மறுக்கும் செயற்பாடாகும். அத்துடன் மாணவர்களைத் தெரிந்தெடுத்து பரீட்சைக்கு அனுப்புவது பரீட்சை எடுக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைப்பதுடன் சித்தியடைவோரின் விகிதாசாரமும் மாவட்ட நிலையில் குறைவடையச் செய்யும் என்பதையும் அதிபர்கள். ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-152)

## நிவாரண வெட்டு:

# அரசசார்பற்ற நிறுவனங்கள் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ். மாவட்டத்தில் உலர் நிவாரணம் பெறுவோரின் எண்ணிக்கையை அரசு குறைத்துள்ளதை ஆட்சேபித்து யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இணையத்தின் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம், செயலாளர் எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோர் இந்த மகஜரில் கையொப்பமிட்டு ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். மாவட்டத்தில் வாழும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களுக்கே இந்த நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது.

'சூரியபிரகாசம்' இராணுவ நடவடிக்கையினால் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலுள்ள இந்த மக்களின் வயிற்றில் அடிப்பதாக நிவாரண நிறுத்தம் அமைந்துள்ளது.

தொழில் பாதிப்புடன் வீடுகளையும், பொருள்களையும் இழந்து அடிப்படை வசதிகளின்றிப் பெரும் சஷ்டத்தை அனுபவித்து வரும் இந்த மககளை நிவாரண வெட்டு வெகுவாகப் பாதித்துள்ளது.

போஷாக்கற்ற நிலையில் வாழும் இந்த அன்றாடங் காய்ச்சிகளின் வயிற்றில் அடிப்பதை நிறுத்தி, நிவாரண நிறுத்தத்தை இரத்துச் செய்யுமாறு கோருகின்றோம்.

இந்த நிவாரண நிறுத்தத்தை உடனடியாக இரத்துச் செய்யுமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு உத்தரவு வழங்குமாறு தங்களை வேண்டுகிறோம்— என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

# பண்டத்தரிப்புச் சந்தையை புனரமைக்க யு. என். டி. பி. உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 2

பண்டத்தரிப்புப் பொதுச் சந்தை ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் உதவித்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளது.

சுடந்த வருடங்களில்இடம் பெற்ற வன்செயல்களின் போது பலத்த சேதமடைந்த இச்சந்தையைப் புனரமைப்பது தொடர்பாக அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே யு.என்.டி.பி. அமைப்பின் உதவியுடன் சந்தையைப் புனரமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-7)

# 14 கிராமிய சங்கங்கள் நல்லூரில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

நல்லூர்ப்பிரதேச செயலர் பிரிவில் 14 கிராம அபிவிருத்திச் சங்கங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

மேலும் இப் பகுதியில் பல கிராம அபிவிருத்திச் சங்கங்களும், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக கிராமஅபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். செல்வரத்தினம் தெரிவித்தார்.

நல்லூர்ப் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள 40 கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுகளிலும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் புனரமைப்புச் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-5)

# 3 ஆயிரத்து 388 நாய்கள் மாநகரப் பகுதியில் அழிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ். மாநகர சபையின் சுகாதார மற்றும் பொறியியற் பகுதியினர் மீளக்குடியமர்வின் பின்னர் இதுவரை மாநகர சபைப் பிரதேசத்தில் 3 ஆயிரத்து 388 கட்டாக்காலி நாய்களைத் தேடிப் பிடித்து அழித்துள்ளனர்.

1996 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 196 நாய்களும், 1997-ம் ஆண்டில் 97 நாய்களும், இந்த ஆண்டின் முதல் ஆறு மாதத்தில் 273 கட்டாக்காலி நாய்களும் இவ்வாறு அழிக்கப்பட்டுள்ளன.

பிடிக்கப்படும் கட்டாக்காலி நாய்களைப் புதைப்பதற்குத் தகுந்த இடமில்லாமையினால் தொடர்ந்து தமது பணியைமேற்கொள்ள முடியாதிருப்பதாக மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-7)

# வியாபாரிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 2

திருநெல்வேலிச் சந்தை புனரமைப்புத் தொடர்பாக சந்தை வியாபாரிகளுக்கும், குத்தகைக்காரர்கள் மற்றும் நல்லூர் பிரதேச சபை உத்தியோகத்தர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று கடந்த சனிக்கிழமை நல்லூர்ப் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

சந்தையின் புனரமைப்புப் பணிகளுக்கு தம்மால் இயன்ற ஒத்துழைப்புக்களைத் தருவதாக வியாபாரிகளும், குத்தகைக்காரர்களும் பிரதேச சபை உத்தியோகத்தர்களுக்குத் தெரிவித்தனர். (ஐ-7)

# ஒயில் விநியோகம்

அரியாலை, ஜூலை 2

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒயில் வகைகளை கப்பல் மூலம் யாழ்ப்பாணம் தருவித்துள்ளது.

இந்த ஒயில்கள் பதிவு செய்யப்பட்ட முகவர் நிலையங்களுக்கும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-17)

# ஊன்றுகோல்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ். பிரதேச செயலக சமூக சேவைப் பகுதியினரால் வெள்ளைப் பிரம்பு மற்றும் ஊன்றுகோல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் 11 வெள்ளைப் பிரம்புகளும், 10 ஊன்று கோல்களும் சமூக சேவைப் பகுதியினரால் வழங்கப்பட்டன.

ஜெய்ப்பூர் செயற்கைக் கால், கைகளை பொருத்துவதற்கான செலவுத்தொகையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேற்படி பகுதியினரால்வழங்கப்பட்டுவருகிறது.

இந்த உதவிகளைப் பெற்றுக் கொள்ள விரும்பும் பாதிக்கப்பட்டவர்கள் சமூக சேவைப் பகுதியினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை புனர்வாழ்வுத்திட்டத்தின் கீழ் யாழ். பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 32 பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-5)

# பழமரச்செய்கைத் திட்டம் இம்மாதம் ஆரம்பம்

பிரான்ஸைத் தலைமையகமாகக் கொண்ட பட்டினிக்கு எதிரான அமைப்பு யாழ். மாவட்டத்தில் பழமரக் கன்று உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக நான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் பழமரக்கன்று விநியோகம் நடைபெறுமெனத்தெரிவிக்கப்படுகிறது.

கோப்பாய், தெல்லிப்பழை, உடுவில், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் செயற்படுத்தப்படும் இத் திட்டத்தின் கீழ் 5 ஆயிரம் குடும்பங்கள் பயன் பெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு குடும்பமும் 5 பழமரக் கன்றுகளையும், ஒரு மண்வெட்டியையும் இலவசமாகப் பெறும். இம் மாதம் முதல் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

'ஏ. சி. எப்' எனப்படும் பஞ்சம் பட்டினிக்கான அமைப்பு கடந்த மார்ச் மாதம் முதல் யாழ்ப்பாணத்தில் செயற்பட்டுவருகிறது. (ஐ-27)

# 400 ஹெக்டேயரில் வெங்காயச் செய்கை

அரியாலை, ஜூலை 2

யாழ். மாவட்டத்தில் 400 ஹெக்டேயர் நிலப்பரப்பில் சின்னவெங்காயம் நடுகை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம் சின்ன வெங்காயச் செய்கையை ஆரம்பத்தில் மேற்கொண்ட விவசாயிகள் தற்போது வெங்காய அறுவடையில் ஈடுபட்டுள்ளனர்.

அறுவடை ஆரம்பித்திருப்பதால் வெங்காயத்தின் விலை சந்தைகளில் குறைந்துள்ளது. (ஐ-17)

## ஜி.சீ.ஈ (சா.த.) பரீட்சை:

# பாடசாலைகளுக் விண்ணப்பப் படிவங்கள்

வலிகாமம்தெற்கு, ஜூலை 2

இவ்வருடம் டிசம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. சாதாரண தர பரீட்சைக்குத்தோற்றும்பாடசாலை மாணவர்களுக்குரிய விண்ணப்பப்படிவங்கள் கல்வி அமைச்சின் பரீட்சை ஆணையாளரால் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர்கள், கேட்கப்பட்டுள்ளனர். உடுவில் கல்விக்கோட்ட பாடசாலை அதிபர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை இம்மாதம் ஒன்பதாம் திகதிக்கு முன் தமக்கு அனுப்பி வைக்குமாறு உடுவில் கல்விக் கோட்டக்கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன் அறிவித்துள்ளார். (ஐ-152)

# செய்திச் சாரம்

## நவாலியில் விவசாயிகள் கலந்துரையாடல்

வலி. தென்மேற்கு

ஜூலை 2

நவாலி விவசாயிகளுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நவாலி வை. எம். சீ. ஏ. கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

பதிவு செய்த, பதிவு செய்யாத அனைத்து ஆண்-பெண் விவசாயிகளும், விவசாய கூலிகளும் இதில்கலந்து தமதுவிவரங்களைப் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இக் கலந்துரையாடலில் பெரும்பாக உத்தியோகஸ்தர் பொ. குகநாதன், கிராம அலுவலர்களான அ. தனபாலரத்தினம், இ. இராஜயோகன், ந. பற்குணராசா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுவர். (ஐ-185)

## நால்வர் சித்தி

பொது எழுதுனர்சேவையின் அதிசிறப்பு வகுப்பில் யாழ். மாவட்டத்தில் நால்வர் அதிசிறப்புச் சித்தியடைந்துள்ளனர்.

மருதங்கேணி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். பசுபதி, தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே. பீதாம்பரம், யாழ். பிரதேசசெயலகத்தைச் சேர்ந்த பீ. லோகநாதன், வலயம் ஒன்று கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த எஸ். வீரசிங்கம் ஆகியோரே 'சுப்றா' எனப்படும் மேற்படி தேர்வில் சித்தியடைந்துள்ளனர். (ஐ-27)

## பாடசாலை புனரமைப்பு

கட்டுவன்புலம் மகாவித்தியாலயம்அகதிகளுக்கான ஐ.நா உயர் ஸ்தானிகராலயத்தின் நுண்கருத் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

தற்போது மல்லாகம் 8 ஆம் கட்டையில் உள்ள தனியார் வீடொன்றில் இப்பாடசாலை இயங்கி வருகின்றது.

திருத்தியமைக்கப் பட்ட பின்னர் பாடசாலை சொந்தஇடத்தில் இயங்குமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-27)

## வாய்க்கால் திருத்தவேலை

நவாலி வேடுவன்கண்டி வாய்க்கால், குதணை வீதி ஆகியன உலக உணவுத் திட்டத்தின் உதவியின் கீழ் திருத்தப்படவுள்ளன.

இவ்வேலைகளைச்செய்ய விருப்பமுள்ள விவசாயிகளுக்கு உலக உணவுத்திட்டத்தினால் உலர் உணவு வழங்கப்படவுள்ளது.

திருத்தவேலைகளைச் செய்ய முன்வரும் ஆண்-பெண் கூலி விவசாயிகள் உடன்நவாலி விவசாயிகள் சம்மேளனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-185)

## அம்பாள் குளம் புனரமைப்பு

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்திற்குப் பின்னால் உள்ள அம்பாள் குளம் யு. என். எச். சி. ஆர் நிறுவனத்தின் உதவியுடன் புனரமைக்கப்படவுள்ளது.

இத் திட்டத்திற்கான அனுமதி யு. என். எச். சி. ஆர் நிறுவனத்திடமிருந்து கிடைத்துள்ளதாக நல்லூர் பிரதேச செயலக திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ-7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சேதமுற்ற வீட்டு உரிமையாளருக்கு ரூ.25 ஆயிரம் வழங்க நடவடிக்கை

## கட்டங் கட்டமாகவே கொடுப்பனவு

யாழ்ப்பாணம் ஜூலை 2
1983 ஜூலை 24 ஆம் திகதியிலிருந்து வன்செயல்கள் மற்றும் பயங்கரவாதம் காரணமாகச் சேதமடைந்த வீடுகளுக்கும், உடைமைகளுக்கும் நஷ்டஈடு வழங்கும் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூபா 25 ஆயிரம் வழங்கப்படவிருக்கிறது.

வடமாகாண மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகார சபையினால் பிரதேச செயலர் பிரிவு மூலமாக விநியோகிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களைப் பூர்த்தி செய்து சமர்ப்பித்தவர்களுக்கே இந்த நஷ்டஈட்டு கொடுப்பனவு வழங்கப்படவிருக்கிறது.

இக்கொடுப்பனவை வழங்குவதற்கான இறுதிக் கட்ட நடவடிக்கைகள் பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதிகஅளவான இழப்பைச் சந்தித்தவர்களுக்கு கிராம சேவையாளரின் சிபார்சின் அடிப்படையில் முதல் கட்டமாக ரூபா 2ஆயிரம் நஷ்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படும்.

பின்னர் அந்தந்தப் பிரதேச செயலர்பிரிவு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் புனரமைப்பு நடவடிக்கைகளைக் கண்காணித்து முன்னேற்ற அறிக்கை சமர்ப்பித்த பின்னரே மிகுதிக் கொடுப்பனவு பகுதி பகுதியாக வழங்கப்படும்.

எந்த ஒரு காரணம் கொண்டும் ரூபா 25 ஆயிரமும் ஒரேடியாக வழங்கப்பட மாட்டாதெனவும் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச செயலர் பிரிவுகளில் தற்போது கிராம அலுவலர்களின் சிபார்சின் அடிப்படையில் முன்னுரிமைப் பட்டியல்கள் தயாரிக்கும் பணிகள் நடையெற்று வருகின்றன.

(இ-7)


## சேவை நல வாழ்த்துகள்

கல்வியுலகில் 22 ஆண்டுகள் ஆங்கில ஆசிரியையாகச் சேவையாற்றி 02 - 07 - 1998 இன்று எமது பாடசாலையிலிருந்து ஓய்வுபெறும் எமது ஆசிரியை

திருமதி
**கனகமணி திருவாதவூரர்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ குளமங்கால் றோ.க வித்தியாலயம்,
குளமங்கால், மல்லாகம்.

(சி/4155)



## நாடகவிழா ஒத்திவைப்பு

ஆரம்ப பிரிவுக்கல்வி அபிவிருத்திச்சங்கம் ஜூலை 3 ஆம், 4 ஆம், 5 ஆம் தினங்களில் நடத்தவிருந்த நாடக விழா எதிர்வரும் ஆகஸ்ட் 28 ஆம், 29 ஆம், 30 ஆம் தினங்களில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆரம்பபிரிவுக் கல்வி அபிவிருத்திச் சங்கம்,
யாழ். மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(57257)



செல்லையா மெற்றாஸ்மயில்
நெறியாள்கையில்

## வேழம்படுத்த வீராங்கனை

(ஆட்ட நாட்டுக்கூத்து)

இடம்: சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபம்
காலம்; 4-7-98 சனிக்கிழமை
மு. ப. 10–12 மணி, பி. ப. 2–4 மணி
இரு காட்சிகள் மாணவர்களுக்கு மட்டும்
5-7-98 ஞாயிற்றுக்கிழமை
மு. ப. 10–12 மணி, பி. ப. 2–4 மணி
இரு காட்சிகள் மாணவர்களுக்கும் பெரியோர்களுக்கும்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்
(57271)



யாழ். குடாநாட்டு வாடிக்கையாளர்களுக்கு

## ஒரு முக்கிய அறிவித்தல்

**EDNA APPLIANCES (Pvt.) Ltd.**

கொழும்பு எட்னா அப்ளையன்ஸஸ் (தனியார்) வரைவுள்ளது என்னும் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தராகிய நாங்கள் உங்களுக்கு அவர்களிடமிருந்து நேரடியாக அவர்களால் தயாரித்து இணைக்கப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்களை விநியோகம் செய்கிறோம். குறிப்பாக

இறிவ்ஸ் **என்பீல்ட்**

இயந்திரத்தின் தொழில்நுட்ப விதிகளுக்கேற்ப அதற்குரிய பம்புகள் அவர்களால் தயாரிக்கப்படுகிறது. இறிவ்ஸ் என்பீல்ட் இயந்திரத்துடன் பம்புகள் இணைக்கும் நடவடிக்கைகள் இறிவ்ஸ் என்பீல்ட் நிறுவனத்தால் நேரடியாக மேற்பார்வை செய்யப்படுகின்றது எனவே இறிவ்ஸ் என்பீல்ட் நிறுவனத்தின் தரம் உறுதி செய்யப்பட்ட என்பீல்ட் நீரிறைக்கும் இயந்திரத்தைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்

EDNA APPLIANCES (P.v.t.) Ltd நிறுவனத்தின்
சில்லறை விலைகள்

என்பீல்ட் M.K 12 - ரூபா 16,990
என்பீல்ட M.K 25 = ரூபா 21,990

**ஏ. எஸ். பொன்னம்பலம் அன்ட் சன்**
176, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(57227)


## சு.க.யாழ்.கிளையின் புதிய செயலாளர்

பொது மக்கள் ஐக்கிய முன்னணியினதும், சுதந்திரக் கட்சியினதும் யாழ். கிளைச் செயலாளராக யாழ். மாவட்டப் பிரதி அமைப்பாளர் த. தேவகுலநாயகம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின யாழ். மாவட்டக் கிளையின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட பிராந்தியப் பொதுச் செயலாளர் எஸ். ஏ. ஒஸ்வால்ட் அகால மரணமானதையடுத்து இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## புதிதாக 10 மலசல கூடங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 2
நல்லூர்ப்பிரதேச செயலர் பிரிவில் 'யுனிசெவ்' நிறுவனத்தின் உதவித்திட்டத்தின் கீழ் புதிய மலசலகூடங்கள் அமைக்கப்படவுள்ளன. சேதமடைந்த மலசலகூடங்கள், கிணறுகள் புனரமைக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின்படி 10 புதிய மலசலகூடங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும், சேதமடைந்த 60 மலசலகூடங்களும், 15 கிணறுகளும் புனரமைக்கப்படவிருப்பதாகவும் நல்லூர்ப்பிரதேச செயலக திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ-7)

## நல்லைக் குமரன் மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 2
யாழ். மாநகரசபை சைவ சமய விவகாரக் குழுவினால் நல்லைக்கந்தன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு வருடந்தோறும் வெளியிடப்படும் "நல்லைக் குமரன் மலர்" வெளியீட்டு விழா எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இம்மலரில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், சிவாச்சாரியர்கள், சைவப் பெரியார்கள் மாணவர்கள் எழுதிய பல்வேறு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

(ஐ-7)

சில கூ. சங்கங்களில்

## உலர் உணவு விநியோகம் இன்னும் தொடங்கப்படவில்லை

இடம் பெயர்ந்தோருக்கான 63 'எ', 'பி' உணவு முத்திரைக்கான உலர் உணவு விநியோகம் குறித்து யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியால் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டும் சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்னமும் நிவாரண விநியோகத்தை ஆரம்பிக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி முதல் மேற்படி இலக்கங்களுக்குரிய உலர் உணவு விநியோகத்தை ஆரம்பிக்குமாறு செயலக புனர்வாழ்வுப் பகுதியால் பிரதேச செயலகங்களுக்கு நிவாரண விநியோகம் குறித்து அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தது.

(ஐ-7)

## முகாம்களில் உள்ளோருக்கு பாய், அரிக்கன்லாம்பு அன்பளிப்பு

சுன்னாகம், ஜூலை 2
வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் முகாம்களில் தங்கியுள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கு பாய், வாளி, அரிக்கன்லாம்பு ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

வை. எம். சி. ஏ. அமைப்பின் அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் இவற்றை வழங்கியது.

நீதிவான் இல்ல முகாமில் உள்ளோருக்கு 60 பாயும், சுந்தரபுரம் முகாமில் உள்ளோருக்கு 81 பாயும், குருவளை முகாமில் உள்ளோருக்கு 62 வாளியும், கோணற்புலம் முகாமில் உள்ளோருக்கு 32 அரிக்கன்லாம்புகளும் வழங்கப்பட்டன.

(ஐ-27)


தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## கேள்விப்பத்திர மூலம் விற்பனை

1. லொறி உடற்கோப்பு (பொடி) இசுசு பழையது - 1
2. லொறி பற்றறி 120, 200 அம்பியஸ் (பாவிக்கப்பட்டது) - 2
3. அரிசி, மா, சீனி மற்றும் பொருள்கள் (பழுதானவை)
4. வெற்றுச்சாக்கு - 12541 தனி
   வெற்றுப்பைகள் 34937 ,,

ஆகியன கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்குண்டு. மீளப்பெறக்கூடிய வைப்புப்பணம் 500 ரூபா செலுத்தி கேள்விப்பத்திரத்தைப் பெற்று பூரணப்படுத்தி 1998 - 07 - 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் பொதுமுகாமையாளர், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம், துர்க்காபுரம், தெல்லிப்பழை என முகவரியிட்டு தபால் உறையில். 'கேள்விப்பத்திரம்' எனக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும்.

பொது முகாமையாளர்
தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்.

1998 - 06 - 30 (சி-4156)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் சிதம்பரப்பிள்ளை கணேசலிங்கம்
(கணேஸ் மாமா)
(படப்பிடிப்பாளர், வாணி வீடியோ, வல்வெட்டித்துறை

மண்ணில் 29 - 09 - 1961
விண்ணில் 02 - 06 - 1998

ஏழிரண்டு ஆண்டுகள் எம்மோடு நீயிணைந்து
தோளோடு தோள்கொடுத்து தொழில் பல புரிந்தாய்–நீ
பண்போடும் பரிவோடும் மற்றவர்களிடம் பழகும்
விந்தையை எண்ணி வியப்படையாதார் யாருமில்லை.
கனிவான உன் பேச்சும் கலைநுணுக்கப் படப்பிடிப்பும்
பண்பாளனே உன் புகழ் பாடி நிற்கும்.
வீடியோ வானின் விடிவெள்ளியே நிலவின்றி
வானில்லை நீயின்றி வாணியில்லை
பாடித் திரிந்த குயில் பாதிவழியே பறந்து
போனதேனோ காலங்கள் மாறலாம்
கணேசனே உன் நினைவுகள் என்றென்றும்
எம் நெஞ்சங்களை விட்டு அகலவே அகலாது!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

என்றென்றும் உங்கள் நினைவில்
வாணி வீடியோ ஸ்தாபனத்தாரும்,
நண்பர்களும்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

(57225)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண... நல்லூர் ... நூலகம்

# உதயன்

## தெளிவு தேவை

அரசினால் மேற்கொள்ளப்படும் அடிப்படை மனித உரிமை மீறல்களை மற்றும் மனித உரிமை மீறல்களை ஜனாதிபதியே நேரில் தலையிட்டு நிரந்தரமாக நிறுத்த வேண்டும் என்று ஒரு கோரிக்கை.

வேறெங்கும் இருந்தல்ல; யாழ்ப்பாணத்தில் இருந்தே இந்தக் கோரிக்கை முன் வைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளையும், மக்கள் பிரதிநிதிகளையும் கொண்ட மனித நீதிக்கான போராட்டக் குழு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் இவ்வாறு கேட்டிருக்கிறது.

தமிழ், மக்களின் குறிப்பாகக், குடாநாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் உட்பட்ட மனித உரிமைகள் மீறப்படுவதை, பறிக்கப்படுவதை அதிகாரிகள், அமைச்சர்கள் மட்டத்தினர் தடுப்பார்கள் என்ற நம்பிக்கையைத் தமிழ் மக்கள் இழந்துவிட்டார்கள் என்பதனையே இந்தக் கோரிக்கை நிறுவுகிறது.

அரசாங்கம் ஒன்று தனது குடிமக்களில் ஒரு பகுதியினருக்கு அடிப்படை உரிமைகளை மறுப்பதானது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத ஒன்று. இலங்கை அரசாங்கம் தமிழர்களிடமிருந்து அவர்களது மனித உரிமைகளைப் பறிப்பது அவர்களை அடக்கி ஆள்வதற்கு — அடக்கு முறைக்கு உட்படுத்துவதற்கு — ஒப்பானதாகும்.

மனித நீதிக்கான போராட்டக்குழு தனது மகஜரில் —

இந்நாட்டுத் தமிழ் மக்கள் மூன்றாந்தரக் குடிமக்களாக அரசினால் நடத்தப்பட்டு வந்த போதிலும் கூட, உங்களால் சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகளும், மனித உரிமைகளும் பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கையின் நிமித்தமே உங்களுக்கு வாக்களித்தார்கள் என்பதனை இச்சூழ்நிலையில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம் — என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது உண்மையிலும் உண்மை. அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதில் மட்டுமன்றி, இனப்பிரச்சினைக்கு அமைதியான வழியில் அரசியல் தீர்வு காண்பார் என்ற நம்பிக்கையுடனேயே தமிழ் மக்கள் சந்திரிகாவுக்கு வாக்களித்தனர். அதிலும் நம்பி மோசம்போய்விட்டார்கள். நான்கு வருடங்கள் கழிந்தும் இது விடயத்தில் தெளிவான சமிக்ஞை ஒன்றைத் தானும் காண முடியவில்லை!

நாட்டின் தலைவரே எல்லா அலுவல்களையும் நேரில்கவனிக்கவேண்டும். கையாள வேண்டும்; அப்போது தான் நல்லாட்சியை நிறுவ முடியும் என்பதல்ல.

ஆனால், மக்கள் பிரச்சினைகளை அறிந்து அவற்றைத் தீர்க்கும் மனமிருந்தால், தமது பணியாளர்களைக் கொண்டே, தலைவர் தமது விருப்பத்தை நிறைவேற்றலாம். ஆனால் அது நடக்கவில்லை. ஆகையால் பிரச்சினை பிரச்சினையாகவே தொடர்வதற்கு இயலாமையா, மனமின்மையா காரணம் என்பது குறித்தும் தமிழர்களுக்குத் தெளிவு தேவை.

# டக்ளஸுக்குப் பாதுகாப்பு வழங்க சிறை அதிகாரிகள் தவறிவிட்டனர்!

## ஈ. பி. டி. பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 2

கைதிகளைப் பார்வையிடச் சென்ற டக்ளஸ்தேவானந்தாவுக்கு உரிய பாதுகாப்பை வழங்க சிறைச்சாலை அதிகாரிகள் தவறிவிட்டனர்.

ஈ. பி. டி. பி. அமைப்பு இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது.

களுத்துறைச் சிறைச்சாலையில் வைத்து டக்ளஸ்தேவானந்தா கைதிகளால் கண்டபடி தாக்கிக் காயப்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக கட்சி வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

''களுத்துறைச் சிறையில் நடந்தது என்ன?'' என்று தலைப்பிட்டு ஈ. பி. டி. பி நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரமேஷ் விடுத்த அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

களுத்துறைச் சிறையில் 30-06-98 அன்று உண்ணாவிரதம் இருந்தவர்களைப் பார்வையிடச்சென்ற எமது கட்சித் தலைவர் டக்ளஸ் தேவானந்தா (பா. உ) அவர்கள் அங்குள்ள சில கைதிகளினால் தாக்கப்பட்டுள்ளார்.

முன்கூட்டியே திட்டமிட்டே இத்தாக்குதல் நடந்துள்ளது. எனினும் உயிராபத்தில் இருந்து டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மீண்டுள்ளார்.

தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவில் டக்ளஸ் தேவானந்தாவுக்கு சிகிச்சை தரப்பட்டு வருகிறது. அவர் ஆபத்தான கட்டத்தை தாண்டியுள்ளார் என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர். சிறைக் கைதிகளைப் பார்வையிடச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினருக்கு உரிய பாதுகாப்பை வழங்க சிறை அதிகாரிகளும் தவறியுள்ளனர்.

தங்களைப் பார்வையிடச் சென்றவர் மீது சில கைதிகள் இவ்வாறான தாக்குதலை நடத்தியது முறையானதல்ல. இதனால் தமிழ்ச் சிறைக் கைதிகளைப் பற்றிய தப்பான அபிப்பிராயம் உருவாகவும் வழிவகுத்து விட்டனர்.

ஆயினும் அங்குள்ள சகல தமிழ்க் கைதிகள் மீதும் நாம் குற்றம் கூறவில்லை.

ஒரு சில கைதிகளைத் தவிர ஏனையோருக்கு இத்தாக்குதலோடு தொடர்பில்லை என்பதை நாமறிவோம்.

விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியற் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதற்காகவே தோழர் டக்ளஸ்தேவானந்தா தீவிரமுயற்சி எடுத்து வந்தார்.

இச் சம்பவத்தைப் பயன்படுத்தி சிறையில் விசாரணையின்றித் தமிழ்க் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை அரசு நியாயப்படுத்த முனையக் கூடாது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ச.ச. நிலையம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

கொட்டடி கற்குள லேன், ஸ்ரார் சனசமூக நிலையமும், பாலர் பாடசாலையும் முன் இருந்த நிலைக்குப் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

ஆரம்பப் பாடசாலைக்குத் தேவையான தளபாடங்களை மனித முன்னேற்ற நடு நிலையம் (கியூடெக்) வழங்கியுள்ளது.

அத்தோடு மேற்படி சனசமூக நிலைய அபிவிருத்திக்கென அகதிகளுக்கான ஐ. நா. தூதரசமும், யாழ். மாநகர சபையும் தலா 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளன.

(இ-ரி)

## சிறுவர்கள் தொடர்பான கிராமிய ஆய்வு

மூளாய், வட்டுக்கோட்டை, தொல்புரம் கிழக்கு ஆகிய பகுதிகளில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் சிறுவர் தொடர்பான கிராமிய ஆய்வு நடத்தப்படவுள்ளது.

சிறுவர்கள் தொடர்பாகவும், அவர்களது குடும்ப சூழல் மற்றும் பொருளாதாரப்பின்னணி தொடர்பாகவும் மேற்படி ஆய்வு அமையும்.

எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் இந்த ஆய்வின் போது சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அதிகாரிகள் நேரடியாகச்சென்று களநிலையிலான ஆய்வுகளை நடத்தவுள்ளனர். இதற்கான ஆரம்ப ஏற்பாடுகளை பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகிறது.

(ஐ-99)

# எங்கள் குழந்தைகள் ஏதிலிகளாக மாறாதிருக்க உங்கள் பங்குஎன்ன?

எழுபதைந்து ஆண்டுகளுக்கு முன்னர் திருநெல்வேலியில்ஓர் இல்லம் எழுந்தது. நமது இளஞ் சிறார்களைக்கல்வியிலும், வாழ்க்கை நடைமுறைகளிலும்மேன்மை பெறச் செய்ய வேண்டி சைவ வித்தியா விருத்திச் சங்கம் அந்த இல்லத்தைத் தொடங்கியது. முத்துத்தம்பி வித்தியாசாலை அந்த இல்லச் சிறுவர்களுக்குஅறிவுக் கல்வியை வழங்கியது. அருகேயிருந்த ஆசிரிய பயிற்சிக்கலாசாலை அவர்களின் வாழ்க்கைக்கான தொழிற் கல்வியைப் பயிற்றுவித்தது.

### தெய்வம் தந்த வீடு

'முத்துத்தம்பி அநாதை இல்லம்' எனப் பெயர்பெற்ற அவ்வில்லத்திலே காலடி எடுத்து வைத்துக் கல்வியைத் தொடர்ந்த பலர் இன்று நாடறிந்த ஆசான்களாக, அதிபர்களாகப் புகழ் பெற்று வாழ்கின்றனர். அதனால் அன்று திருநெல்வேலிக் கிராமம் நாடறிந்த கிராமமாக விளங்கிற்று. கலாசாலை வீதி கல்விமான்கள் நடந்த வீதியாய் விரிந்து கிடந்தது. நல்ல ாழ்வைப் பலர் பெற்றதால் புண்ணிய பூமியாய் அப்பிரதேசம் புகழோடு நிலவிற்று. அநாதை இல்லம் தெய்வந்தந்த வீடாய்த் திருவுடன் பொழிந்து நின்றது.

இன்று, கால ஓட்டத்தில் பல்வேறு தடைகளைத் தாண்டி அந்த முத்துத்தம்பி அநாதை இல்லம் நிறைவாழ்வு இல்லமாக, சைவச் சிறார்க்கு அடைக்கலம் தரும் அன்பு இல்லமாக நடைபெற எமது சைவ வித்தியாவிருத்திச் சங்கம் பெரிதும் பாடுபடுகிறது. எங்கள் சைவக் குழந்தைகள் எமது பிரதேசத்தில் ஏதிலிகள் ஆகக் கூடாது. இதுவே எமது சங்கத்தின் உயரியநோக்கு. சங்கத்தை அன்று தொடங்கிய சேர். பொன். இராமநாதனின் நோக்கமும் இதுவே.

கடந்தகால நிகழ்வுகளால் இல்லமும் கூட இடம் பெயர்ந்தது: 1995 ஒக்ரோபர் 18ஆம் நாள் இல்லத்திலே வந்து விழுந்தது 'ஷெல்'. எமது சிறார்களை அன்று பரமேஸ்வரன் பாதுகாத்த அற்புதம். அதை எம்மால் சொல்லில் வடிக்க முடியாது. தெய்வம் தந்த வீடு எமது சிறார் வாழும் இல்லம் என்பதை மட்டுமே சைவ வித்தியா விருத்திச் சங்கம் நன்குணர்ந்து கொண்டது. நிறைவாழ்வு இல்லத்தை மீண்டும் திருநெல்வேலியில் இயக்க முயற்சித்தது, கட்டடங்களின் சிதைவும் பொருள்களின் இழப்பும் எமக்குப் பெரிதும் துன்பந் தந்தன.

185 அன்பு மலர்கள் வாழ்ந்த இடத்தில் தற்போது 55 மலர்களையே வைத்திருக்கின்றோம். தாய் தந்தையரை இழந்த அல்லது பிரிந்த பிஞ்சுகள் நிறைய எம்மில்லத்தை நாடிவருகின்றன. அவர்களின் சோகச் சுமைகளை இறக்கி ஆறுதல் பெற இல்லக் கட்டடவசதி பெருக வேண்டும். ஏனைய பொருள்களும் தேடவேண்டும். இதைவிட ஒரு குழந்தைக்கு நாள்தோறும் உணவும் உடையும் மட்டும் கொடுத்தால் போதாது. அதன் உள்ளம் மலர அன்பும் வேண்டும். எதையோ எப்போதோ இழந்து, இழந்தவரை இனிமேல் காண முடியாது என்பதையே உணர முடியாத சின்னஞ் சிறிசுகள் கன்னத்தை வருடிக் கண்களில் அன்பைக் காட்டவேண்டும் எனக் காத்திருக்கும் பிஞ்சுகள். அக்குஞ்சுகளின் கண்களில் எப்போதும் ஒரு தேடல். யாரையோ எதிர்பார்த்து நிற்கும் துடிப்பு. மனிதரைப் புரிந்து கொள்ள முடியாத மலைப்பு: 'நான் யார்?' எனக் கேட்டு விடைதெரியாமல் திகைப்பு.

### வேண்டுகோள்

சோற்றைப் பிஞ்சுக்கரங்களால் பிசையும் போது என்றோ விட்டுப் பிரிந்த அம்மாவின் அன்புமுகம் நினைவுக்கு வர சொல்லால் விளக்க முடியாத சோகம் கண்ணீராய்க்கரைந்துசோற்றிலே கலக்க, நினைவு கலைந்து ''நல்ல சொதி'' யெனச் சுவையாய்ச் சப்புக் கொட்டி உண்ணும் கோலம். இதைக்காண நெஞ்சு வலிக்கிறது. இந்தப் பிஞ்சுகளின் முகத்தை மலர்த்த வேண்டுமென உள்ளம் ஆணையிடுகிறது. அனைவரையும் எம்மோடு இணைத்துப் பணி செய்யவேண்டுமென ஆவல் எழுந்தது; அந்நிலையிலே எழுந்ததே இப்பணிவான வேண்டுகோள்.

எமது அன்புக்குழந்தைகளின் மனச்சுமையை இறக்கி வைக்க வேண்டும். கடந்த காலத்தின் சோக நிழல்கள் குழந்தைகள் முகத்திலிருந்து மறைய வேண்டும். சிறுவர் நிறைவாழ்வு இல்லச் சிறுவர்களின் முகத்திலே தெய்வத்தின் சிரிப்பைக் காணவேண்டும். எம்மில்லத்திலே கூடி வாழும் குழந்தைகளின் நல்வாழ்க்கை எமது சமூகத்தவர் கொடையால் சிறக்க வேண்டும். பிஞ்சு மனங்களிலே அச்சம் அகல வேண்டும். கல்வியின் பெருமை பதிய வேண்டும். அதற்கானவற்றைச் செய்ய எமக்கு நிதி வேண்டும். இருகரம் நீட்டிக் கேட்கிறோம். சமூகத்தவர் கொடையால் குழந்தைகளின் கண்ணீர் காயும். உள்ளம் பூரிக்கும். எம்மில்லம் தெய்வம் தந்த வீடு. எல்லோருக்கும் பணி செய்யும் பங்கு உண்டு. எதிர்கால இளந் தலைமுறையினரையும் ஏற்ற நிதியுதவி கேட்கிறோம். எல்லோரும் வாருங்கள், எம்முடன் வடம் பிடியுங்கள். அன்புத்தேர் அசையும். இறைவன் கருணை எம்பால் பெருகும். அதை உலகம் கண்டு களிக்கும்.

பேராசிரியர்
அ. சண்முகதாஸ்
(தலைவர், சைவவித்தியா விருத்திச் சங்கம்)

## சாயி சிந்தனை

ஒரு தம்ளரில் தண்ணீர் இருக்கின்றது. சர்க்கரை தம்ளர் அடியில் தேங்கி இருக்கிறது. மேற்புறத்தில் உள்ள தண்ணீரைக் குடித்தால், அதற்குச் சுவையே இல்லை. கடவுள் ''பித்தா! உலக இன்பங்களும், மகிழ்ச்சியும் சுவையற்றவை என்று தெரிந்து கொள்'' என்று கூறுகிறார். இவையெல்லாம் மனதின் மூலம் கிடைக்கும் அனுபவங்கள். புத்தி என்ற கரண்டியை எடுத்து, தம்ளருக்குள்ளே செலுத்தி, தண்ணீரை நன்கு கலக்கு, சர்க்கரை தண்ணீரில் முழுவதும் கரைகிறது. சர்க்கரை தண்ணீர் முழுவதும் மேலும், கீழும் சுற்றிலும் பரவியிருக்கிறது. இருப்பது ஒரே உண்மைதான். அதுவே இதயத்தின் அடித்தளத்தில் உள்ள தெய்வீகம் என்ற சர்க்கரை. உலக ஆசைகள் என்ற தண்ணீரால் எமது இதயத்தை நிரப்பியிருக்கிறோம். எல்லாவற்றையும் நன்கு கலந்து கொள். தெய்வீகம் வேறுபாடில்லாது எல்லாவற்றுடனும் கலந்து விடுகிறது. தண்ணீர் இனிப்பாக மாறுகிறது. உலகத்திற்கும் ஆன்மீகத்திற்கும் வேறுபாடே இல்லை.

ஆதாரம்: சாயி அருளமுதம்

## நாளை

ஆனி - 19
வெள்ளிக் கிழமை
திதி: நவமி
பிற்பகல் 04.12 வரை.
நட்சத்திரம்: சித்திரை
சுபநேரம் 5.57 - 6.27
ராகுகாலம்: 10.27 - 11.57
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

வீரச் செயலை விட, துன்பம் சகிக்கும் சக்தியே உயர் குணத்துக்குரிய சிறந்த சாதனையாகும்.

- ஆவ்பரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை தொடங்கும் கால் இறுதி ஆட்டத்தில்

# பிரேசில், இத்தாலி, பிரான்ஸ், டென்மார்க், ஜேர்மனி,

# நெதர்லாந்து, ஆர்ஜென்ரீனா, குரோஷியா அணிகள்

FRANCE 98

பாரிஸ், ஜூலை 2 பிரான்ஸில்நடைபெறும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டித் தொடரின் கால் இறுதி ஆட்டங்கள் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றன.

நேற்று முன்தினம் முடிவடைந்த கால் இறுதிக்கு முந்திய ஆட்டத்தில் வெற்றியீட்டிய எட்டு அணிகளும் கால் இறுதி ஆட்டத்தில் மோதவுள்ளன.

பிறேசில், இத்தாலி, பிரான்ஸ், டென்மார்க், ஜேர்மனி, நெதர்லாந்து, ஆர்ஜென்ரீனா, குறோஷியா ஆகிய எட்டு நாடுகளின் அணிகளே இப்போட்டியில் சந்திக்கவுள்ளன.

இந்த உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் மொத்தம் 32 அணிகள் 8 பிரிவுகளாக வகுக்கப்பட்டு போட்டி நடத்தப்பட்டது. அந்த முதல் சுற்றில் தலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற 16 அணிகள் கால் இறுதிக்கு முந்திய இரண்டாவது சுற்றில் மோதின. இப்போட்டி 'நொக் அவுட்' முறையில் நடந்தது. இந்த இரண்டாவது சுற்றில் வெற்றியீட்டிய எட்டு அணிகளுமே கால் இறுதியில் மோதவுள்ளன.

கால் இறுதிப்போட்டிகள் நாளை வெள்ளி, நாளை மறுதினம் சனி ஆகிய இரு தினங்கள் நடைபெறும். நாளைய போட்டியில் பிறேசில் அணி டென்மார்க்கையும், இத்தாலி அணி பிரான்ஸையும் சந்திக்கின்றன.

அரையிறுதி ஆட்டங்கள் எதிர்வரும் 7 ஆம் 8ஆம் திகதிகளில் நடைபெறும். அதில் தோல்வியடையும் இரு அணிகளும்மூன்றாம்இடத்தைத் தீர்மானிப்பதற்கான ஆட்டத்தில் மோதும். இந்த ஆட்டம்11ஆம் திகதி நடைபெறும்.

இறுதி ஆட்டம் எதிர்வரும்12-ம்திகதி இலங்கை நேரப்படி இரவு 1.30 மணி முதல் — நடைபெறும்.



(ஐ-6)

# மூளாய் ஆஸ்பத்திரி புனரமைக்கப்படும்

மூளாய், ஜூலை 2 தொல்புரம் அரசினர் வைத்தியசாலை ஐந்து லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் நிதி உதவியுடன் மேற்படி புனரமைப்பு வேலைகள் நடைபெறவுள்ளன. இப்புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்காக மேற்படி வைத்தியசாலையில் வைத்திய அதிகாரி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. மிக விரைவில் இவ் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

(ஐ-99)

# 100 பொதிகளில் தபால்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 2 யாழ். மாவட்டத்துக்குரிய வெளியூர்த் தபால்கள் அடங்கிய 100 தபாற்பொதிகள் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டன.

தபால்களைத் தரம் பிரித்து விநியோகிக்கும் பணிகள் நேற்றே ஆரம்பமாகின.

இதேவேளை யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து சேகரிக்கப்பட்ட வெளியூர்த்தபால்கள் அடங்கிய 24 தபாற்பொதிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் நேற்று திருமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

(ஐ-7)

# கைதான இருவர் பற்றி செஞ்சிலுவையிடம் புகார்!

வடமராட்சிப் பகுதியில் கைது செய்யப்பட்ட இருவரின் நிலை குறித்து அவர்களின் உறவினர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

பருத்தித்துறை மூன்றாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த மயில்வாகனம் — நாகரஞ்சினி (வயது 23), கொத்தி பாதி அல்வாய் தெற்கைச் சேர்ந்த இரத்தினசிங்கம் — மணிவண்ணன் (வயது 25) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டிருப்பதாக உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

(ஐ-109)

## வளர்ச்சி, திறமை, பெறுபேற்றைப் பேண

# சகல பாடசாலை மாணவர்களுக்கும் தனித்தனி 'செயலடைவுக்கோவை'

வலிகாமம் தெற்கு, ஜூலை 2 பாடசாலை மட்ட மாணவருக்கான கணிப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாணவனுக்கும் ஒவ்வொரு பாடத்துக்குமான ''செயலடைவுக் கோவை'' பேணப்பட உள்ளது இக்கோவையில் அம்மாணவன் சம்பந்தமான பாடரீதியிலான திறமைகள், பெறப்பட்ட சான்றிதழ்கள், முன்னேற்ற அறிக்கைகள் பேணப்படவும் உள்ளன. கல்வி மேம்பாடடைந்த நாடுகளில் இது போன்று செயலடைவுக் கோவைகள் பேணப்படுகின்றன.

திருகோணமலையில் உள்ள மாகாணக் கல்வித் திணைக்களத்தில் மாணவர் கணிப்பீடு சம்பந்தமாக நடைபெற்ற கருத்தரங்கில் இது சம்பந்தமாக வலியுறுத்தப்பட்டது.

ஒவ்வொரு கோட்டத்திலும் இருந்து மாணவர் கணிப்பீட்டுத்திட்டத்தை மேற்கொள்வதற்கு பொருத்தமான தெரிவு செய்யப்பட்ட ஆளணியினர் மேற்படி கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

மாகாணக்கல்வி அமைச்சின் முகாமைத்துவ நிலையத்தில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு திட்டக் கருக்களைத் தயாரித்தல் தொடர்பான இச் செயலமர்வு கடந்த ஜூன் 9 ஆம் திகதியில் இருந்து 13 ஆம் திகதி வரை நடைபெற்றது.

தேசிய கல்வி நிறுவக கல்விப்பணிப்பாளர் எம். என். நவரட்ண, சமூக கல்விசெயற்றிட்ட உத்தியோகத்தர் கனகரத்தினம், மாகாணக் கல்விப்பணிப்பாளர் ச. சுப்பிரமணியம் ஆகியோர் இச் செயலமர்வை வழிநடத்தினர்.

பாடசாலைமட்ட கணிப்பீட்டுத்திட்ட அமுலாக்கம், எதிர்பார்ப்பு - அடைவுமுன்னேற்றம், கணிப்பீட்டுநுட்பங்கள், வேலைத்திட்டங்கள், பாடசாலைகளில் திட்டத்தை மேற்கொள்ளும் போது ஏற்படும் பிரச்சினைகள், அவற்றை விடுவித்தல், 7,, 8, ஆம் வகுப்புகளில் கணிப்பீட்டுதிட்ட கருவிகள் வகுத்தல், கற்றல், கற்பித்தலில் பெற்றோரின் விழிப்புணர்வை மேம்படுத்தல் போன்ற பல விடயங்கள் செயலமர்வின் போது ஆராயப்பட்டன. (ஐ-152)


**NEW SCIENCE COLLEGE**

மானிப்பாய் வீதி, மானிப்பாய்.

ஆண்டு 8, 9, 10, O/L வரையான வகுப்புக்கள்

ஆரம்பம்: 02 - 07 - 1998 மாலை 3மணி

கணிதம் — திரு. S: P. வினோத்
விஞ்ஞானம் — திரு. பாலமுருகன்
சமூகக்கல்வி — திரு. K. S. முத்துலிங்கம், திரு. M. முருகவேள், திரு V, சிவராசா
தமிழ் — திரு. ஆர்த்திகன், திரு. J கோகலே, திரு. S. A. சந்திரன்
ஆங்கிலம் — பிரபல ஆசிரியர்
சமயம் — திரு. S, A. சந்திரன்

அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை.

- நிர்வாகி

(57293)


# அனுமதி கிடைத்தும் படகுகளைப் பயன்படுத்த முடியாத நிலை

## யாழ். மீனவர் நிலை பற்றிகருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை2 எட்டு குதிரைச் சக்தி கொண்ட மீன்பிடி வெளியிணைப்பு இயந்திரங்களைப் பாவித்து குடாநாட்டில் கடற்றொழில் செய்ய பாதுகாப்பு அமைச்சு அனுமதியளித்துள்ள போதும், இயந்திரப்படகுகளை உபயோகிக்க முடியாமல் உள்ளது.

இவ்வாறு, யாழ் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலர் எஸ். ஏ ஜோசேப் தெரிவித்தார்.

கடந்த 25 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் நடந்த கடற்றொழிலாளர் எதிர் நோக்கும் இன்றைய பிரச்சினைகள் தொடர்பான கருத்தரங்கில் யாழ். மாவட்டத்தில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றிய போது அவர் மேலும் கூறியதாவது:

பாதுகாப்பு அமைச்சும், யாழ். நகர கட்டளைத் தளபதியும் கடல் வலயத் தடைச் சட்டங்களை ஓரளவாவது தளர்த்தி மீன் பிடிக்க அனுமதி அளித்துள்ளனர். அதன்படி அதிகாலை 2 மணியிலிருந்து காலை 6 மணிவரையும் மீன் பிடிக்க முடியும். 8 குதிரைச் சக்தி கொண்ட வெளியிணைப்பு இயந்திரங்களை இதற்காக பாவிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் அந்த நேரத்தில் காவல் கடமைகளில் இருக்கும் படையினரின் மனோபாவம் சில வேளைகளில் தொழிலாளர்களின் வயிற்றில் அடித்து விடுகிறது.

மாலை 5 மணிக்குக் கடற்கரைக்குச் சென்று [illegible] அதிகாலை [illegible] மணிக்கே கடலினுள் செல்ல அனுமதிப்பார்கள்.

பின்னர் மீன் பிடித்தாலென்ன, பிடிக்காவிட்டாலென்ன காலை 6 மணிக்குள் கரைக்குத்திரும்பி விடவேண்டும். இல்லாவிடில் அடிஉதைகளுடன் 5 நாள்களுக்கு மீன் பிடிக்க முடியாது.

5 கடல் மைல் வரை சென்று மீன்பிடிக்க அனுமதி அளிக்கப்பட்ட போதிலும் 2 கடல் மைல்வரையே செல்லும்படி காவலிலுள்ளவர்கள் கண்டிப்பாக கூறி விடுவதால், குறிப்பிட்ட கால, தூர இடைவெளியில் மீன்பிடிக்க முடியாது. சண்ணாடி இழைப்படகுகளை பயன்படுத்த அனுமதி அளிக்கப்படாததால் சுமார் ஆயிரம்படகுகள் வரை வீணாக வீடுகளில் வைக்கப்பட்டுள்ளன [illegible] இப்படி அவர் கூறினார்.

(இ-ரி-5)


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

A/L 2000 கலை, வர்த்தக, வகுப்புகள் புதிய பிரிவு

கணக்கியல்: திரு. பாலவாசன்
பொருளியல்: திரு. விககி
வர்த்தகவியல்: திரு. முரளி
அளவையியல், திரு. சயந்தன்
தமிழ்: திரு. லிங்கம்
இந்துசமயம்: / இந்துநாகரிகம்: திரு. பத்மராஜா
புவியியல்: செல்வி நிர்மலா
வரலாறு: பிரபல ஆசிரியர்
அரசியல்: திரு. ஜெயக்குமார்
கிறிஸ்தவநாகரிகம்: திரு. வசந்தன்

ஆரம்பம்: 04 - 07 - 1998 9 மணி

(57291)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம் யாழ்ப்பாணம்

# விமானம் மூலம் கடலுணவுப் பொருள் அனுப்ப சங்கம் அனுமதி கோருகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 2 விமானம் மூலம் கடலுண வுப் பொருள்களை கொழும் புக்கு அனுப்பி வைப்பதற்கு அனுமதி வழங்குமாறு கோரி குருநகர் கடற்றொழிலாளர் சங்கம் பாதுகாப்பு அமைச் சுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

விமானம் மூலம் கடலுண வுப் பொருள்களை அனுப்பி வைப்பதற்கு நாம் அனுமதி வழங்குமாறு கேட்ட போது கடலுணவுப் பொருள்களை பரிசோதனை செய்யும் 'ஸ்கானிங்' கருவி பலாலி விமான நிலையத்தில் இல்லா மையினால் இந்தப் பொருள் களைக்கொழும்புக்கு அனுப்ப முடியாது என்று காரணம் கூறப்பட்டது.

ஆனால் தற்பொழுது தனி யார் வியாபாரிகள் சிலர் கடற்றொழிலாளர்களிடம் இருந்துகடலுணவுப்பொருள் களைக் குறைந்த விலையில் கொள்வனவு செய்து விமா னம் மூலம் கொழும்புக்கு அனுப்பி கூடிய விலையில் விற்று இலாபம் ஈட்டுகின்ற னர்.

கடலுணவுப் பொருள் களைக் கொழும்புக்கு அனுப் புவது தொடர்பாக கடற் றொழில் அமைச்சு, வடக் கின் மீள் குடியேற்றப் புனர் வாழ்வு புனரமைப்பு அதிகார சபை போன்றவற்றுடன் பல தடவைகள் நாம் தொடர்பு கொண்டும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

'ஸ்கானிங்' கருவி இல்லா மையைக் காரணங் காட்டி எமக்கு அனுமதி மறுக்கப் பட்ட நிலையில், தற்போது நாளாந்தம் கடலுணவுப் பொருள்கள் யாழ்ப்பாணத் தில் இருந்து விமானம் மூலம் கொழும்புக்கு அனுப்பப்படு கின்றன.

குருநகர்ப் பகுதி கடற் றொழிலாளர்களாகிய நாம நாளாந்தம் ஆயிரத்து ஐந் நூறு கிலோ கடலுணவைப் பிடிக்கின்றோம்.

இங்கு சிறந்த சந்தை வாய்ப்பு இல்லாததால் இவற்றை விற்பனை செய்ய முடியாத நிலையே உள்ளது.

எனவே கொழும்புக்கு இந் தப் பொருள்களை விமானம் மூலம் அனுப்பிஇவற்றுக்கான சந்தை வாய்ப்புக்களைப் பெறுவதற்கு உதவுமாறு வேண்டுகின்றோம்.

இப்படி கடிதத்தில் தெரி விக்கப்பட்டுள்ளது. (இ-5)


உங்கள்

**கலர்ப் படச் சுருள்களை**

விரைவில் கழுவிப் பெற்றுக்கொள்ள

**சுனில் ஆட்ஸ்**

272, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

16 — 6 — 98 வரை எம்மிடம் ஒப்படைத்த றோல்களுக்கான படங்களை பெற்றுக்கொள்ளலாம்.

10 நாள் தவணைக்குள் படங்கள் கழுவிக் கொடுக்கப்படும்.

(சி/4165)



**இதோ,**

★ உலகெங்கும் தொடர்பு கொள்ள
- தொலைத்தொடர்பு

★ மாவட்டமெங்கும் பயணம் செய்ய
- ஓட்டோ சேவை

நாடுங்கள்

**கூட்டுறவு தொலைத் தொடர்பகம்**
- 021 / 2143

**கூட்டுறவு ஓட்டோ சேவை**

அங்கத்தவர்கள், பொது மக்களின் நன்மை கருதி எம்மால் வழங்கப்படும் நியாயமான கட்டணத் திலான, நிறைவான சேவையைப் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்.

பொதுமுகாமையாளர்,
நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(சி/4163)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**திருமதி செல்லத்துரை காமாட்சிப்பிள்ளை**

இகத்தில்: **20-36-1914** பரத்தில்: **03-06-1998**

மெல்லெனப்பேசி வன்மைகள் தீர்த்தாய்
பிள்ளைகள் ஒற்றுமை பேணிக்காத்தாய்
கல்லென நெஞ்சம் கரையும் வண்ணம்
சொல்லினால் உற்றார் ஒற்றுமை பேணிக்
காத்தாய்!

31 ஆம் நாளில் [02-07-98] இன்று வீட்டில் நடை பெறும் வீட்டுக்கிரியை நிகழ்வுகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன் புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

44/7, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

(57288)

## ஆங்கில தினம்

கைதடி விக்னேஸ்வர வித் தியாலய ஆங்கில தினவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடை பெறும்.

பிரதம விருந்தினராகதென் மராட்சி கோட்ட உதவிக்கல் விப் பணிப்பாளர் இ. கயிலை நாதனும் சிறப்பு விருந்தின ராக ஆங்கில சேவைக்கால ஆலோசகர் என். எஸ் நட ராஜாவும் கலந்து கொள் வார்கள். (இ-ரி)

## நியமனம்

சாவகச்சேரி பிரதேச செய லகத்தில் உதவித்திட்டமிடல் பணிப்பாளராகப் பணி புரிந்த எஸ். நல்லையா யாழ். செயலக உதவித்திட்டப் பணிப்பாளராக கடந்த மாதத்திலிருந்து இடமாற் றம் செய்யப்பட்டுள்ளார். (ஐ-100)


**மாணவர் உதவிப் பணக் கொடுப்பனவு**

யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் உதவிப் பணக் கொடுப் பனவுகள் வழங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

96 / A ] 03 - 07 - 98
96 / C ] 08 - 07 - 98

96 / BAD ] 06 - 07 - 98
96 / FP ] 10 - 07 - 98

1 ஆம் வருட
மாணவப் பிரதிநிதி

(57283)


### தாக்குதலுக்கு மத்தியில்

# ஈ. பி. டி. பி. பணி தொடரும் என்கிறார் ஜெகன்

யாழ்ப்பாணம், ஜூலை 2 "யாழ். மாவட்டத்தில் எமது இயக்க உறுப்பினர்கள் இருவர் சுடப்பட்டுள்ளனர்- களுத்துறைச் சிறையில் வைத்து எமது தலைவர் டக் ளஸ் தேவானந்தா தாக்கப் பட்டுள்ளார்- இத்தகைய ஆத்திரமூட்டும் செயல் களுக்காக எமது மக்கள் பணி நிறுத்தப்படமாட்டாது. மக் களுக்கான எமது பணி தொடரும்".

ஈ. பி. டி. பி. யாழ். மாவட்ட அமைப்பாளர் வி. கே. ஜெகன் செய்திக் குறிப்பு ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது போன்ற ஆத்திரமூட் டும் செயல் மூலம் எமது பணி கள் திசைமாறிப்போகும் என சிலர் நினைக்கிறார்கள் அப் படி நினைப்பது முட்டாள் தனமானது. மக்களுக்காக நாம் செய்து வரும் பணிகள் தொடரும் பணிகள் நிறுத் தப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கைதிகளுக்கு நீதி வழங்க சுயேச்சைக்குழு கோரிக்கை

களுத்துறை சிறைச்சாலை யில் நாடாளுமன்ற உறுப்பி னர் தாக்கப்பட்ட மனம் வருந்தத்தக்க நிகழ்வானது அரசின் வாக்குறுதிகளில் நம் பிக்கை இழந்ததனால் ஏற் பட்ட விரக்தியின் வெளிப் பாடே. ஆகவே அரசு அக் கைதிகளுக்கு நீதி வழங்க முன்வரவேண்டும் என்பதே எமது கருத்தாகும்.

மேற்கண்டவாறு யாழ். மாவட்ட சுயேச்சைக் குழு வைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் நா. இ. இராமேஸ் வரன் ஜனாதிபதிக்கு அனுப் பிய செய்தியில் தெரிவித்துள் ளார்.

பலதடவைகள் கைதிகளின் நியாயமான குரல்களுக்கும் சாத்வீகப் போராட்டங் களுக்கும் அரசு செவிமடுக் காததால் ஏற்பட்ட அதிருப் தியும் வேதனையுமே அவர் களை இந்த நிகழ்வுக்குத் தள்ளியுள்ளதாக நாம் கருது கிறோம்.

ஆகவே இன்னும் காலதாம தம் செய்யாது அரசு அக் கைதிகளுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் நீதி கிடைக்க உடனடியாக ஆவன செய்ய வேண்டும். அத னூடாகவே அரசு தன் மதிப் பைப் பேணிக்கொள்ள முடி யும் என்பதையும் நாம் சுட் டிக்காட்ட விரும்புகிறோம்.

ஆகவே ஜனாதிபதி இந்த விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு கைதிகளுக்கும் அவர்களின் குடும்பங்களுக் கும் நீதி கிடைக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண் டும்.

இப்படி மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (இ)

# ஈ. பி. ஆர். எல். எவ். கண்டித்து அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 2 களுத்துறைச் சம்பவம் தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:

களுத்துறைச் சிறையில் உண்ணாவிரதப் போராட் டத்தை மேற்கொண்டிருந்த தமிழ் கைதிகளைப் பார்வை யிடச் சென்ற ஈழமக்கள் ஜன நாயகக்கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவா னந்தா அங்கிருந்த வேறு சில தமிழ்க்கைதிகளால் தாக்கப் பட்ட மிலேச்சத்தனமான நடவடிக்கையை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன் னணி வன்மையாகக் கண்டிக் கின்றது.

சர்வதேச சமூகத்தின் முன் எமது மக்களின் நியாயமான போராட்டம் தார்மீக ஆத ரவை இழந்து வரும் இன் றைய நிலையில், இச்சம்பவம் மீண்டும் ஒரு தலை குனி வையே எமக்கு ஏற்படுத்தி உள்ளது.

இவ்வாறான மிலேச்சத்தன மான செயல்களுக்குப் பின் னால் உள்ளசக்திகளை தமிழ் மக்கள் சரியாக அறிந்து கொள்ள வேண்டும். பல்வேறு சிறைகளிலே வாடும் ஆயிரக் கணக்கான நிரபராதிகளின் நியாயமான போராட்டங் களை இவ்வாறான ஒரு சில ரின் மிலேச்சத்தனமான நட வடிக்கையைச் சாட்டாக வைத்து அரசு உதாசீனப் படுத்தக் கூடாது என்பதை யும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

காயமடைந்து மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் தேவானந்தா விரை வில் குணமடைய வேண்டும் என நாம் விரும்புகின்றோம் என்றுள்ளது. (இ)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 2 யாழ்ப்பாணம் திரு வண்ணைநகர் அருள்மிகு ஸ்ரீஅங்குசபாசப்பிள்ளையார் கோயில் அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 4.45 மணி முதல் ஆலயத்தில் தெய்வீகப் பேருரை இடம்பெறும். (ஐ-7)

★ ★ ★

நவாலி குளத்தடி ஞான வைரவர் கோயில் அலங்கார உற்சவம் நாளை வெள்ளிக் கிழமை முதல் பத்துத் தினங் கள் நடைபெற்று எதிர்வரும் 12 ஆம் திகதி சங்காபிஷே கம், பொங்கலுடன் நிறைவு பெறவுள்ளது. (ஐ-8)

★ ★ ★

அல்வாய் மேற்கு மடுமாதா தின விழா இன்று பகல் 12 மணிக்கு விசேட பூசைகள், அன்னதானம் ஆகியவற்று டன் நடைபெறும். (இ-3)

★ ★ ★

சாவகச்சேரி வடக்கு மண் டுவில் அருள்மிகு ஸ்ரீஇலஞ் சியாரணியம் அம்மன் தேவஸ் தான (சோலையம்மன்) வரு டாந்த மகோற்சவம் கடந்த 30 ஆம் திகதி கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி நடை பெற்று வருகின்றது.

எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திரு விழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள் ளது. (ஐ-31-30)

★ ★ ★

சாவகச்சேரி நுணாவில் மத்தி திருவருள மிகு ஸ்ரீ வைரவப் பெருமான் கோயி லில் கடந்த சனிக்கிழமை இலட்சார்ச்சனை ஆரம்ப மாகியுள்ளது. இலட்சார்ச் சனை தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும்.

கிரியைகள் யாவும் ஆலயத் தின் பிரதம சிவாச்சாரியார் மட்டுவில் சிவ ஸ்ரீ கி. சோம சுந்தரக் குருக்கள் தலைமை யில் நடைபெறும்.

தினமும் மாலையில் நுணா வில் மத்தி இந்து இளைஞர் மன்ற அங்கத்தவர்களின் சமயச் சொற்பொழிவும், மேற்படி ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் இந்து மதத்துடன் தொடர் புடைய கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (இ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

அகில இலங்கை
சைவக்குருமார் அர்ச்சகர் சபையின் உறுப்பினரும்
பிரபல சுவாமி அலங்கரிப்பாளருமாகிய

## தில்லைநாதன்ஐயா விமலேந்திரன்ஐயா

அவர்களின் மறைவையிட்டு மிகுந்த துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது சபையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அகில இலங்கை சைவக்குருமார்**
**அர்ச்சகர் சபை**

நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

(சி/4167)

# இதய அஞ்சலி

கற்பகவிநாயகர் தேவஸ்தான
மூர்த்தி அலங்கரிப்பாளராகிய

## தில்லைநாதன் ஐயா விமலேந்திரன் ஐயா

அவர்களின் மறைவையிட்டு அதிர்ச்சியடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் இதய அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.

**கற்பக விநாயகர் தேவஸ்தானம்.**

இருபாலை,
கோப்பாய்.

(சி/4166)

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

**யாழ். கிளைத் தலைமையகம்**

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**
**யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, வேலணைப் பிரிவுகளுக்கான**

## ஆண்டுப் பொதுச்சபைக் கூட்டமும் தேர்தலும் - 1998

ஆண்டுப் பொதுக் கூட்டமும் தேர்தலும்:-
19 - 07 - 1998 அந்தந்தப் பிரிவுகள் அறிவிக்கும் இடத்தில்.

நியமனப் பத்திரம் பெற்றுக்கொள்ளல்:-
06 - 07 - 1998 முதல் 10 - 07 - 1998 வரை
(அந்தந்தப் பிரிவுக் காரியாலயத்தில்)

நியமனப் பத்திரம் ஏற்றுக்கொள்ளல்;-
11 - 07 - 1998 முற்பகல் 9.00 மணி முதல்
பிற்பகல் 4.00 மணி வரை
(அந்தந்தப் பிரிவுக் காரியாலயத்தில்)

நியமனப் பத்திரம் வாபஸ் பெற்றுக்கொள்ளல்;-
13 - 07 - 1998 முற்பகல் 9 00 மணி முதல்
பிற்பகல் 4.00 மணி வரை
(அந்தந்தப் பிரிவுக் காரியாலயத்தில்)

(பிரிவுத் தலைவர்/செயலாளர் ஆண்டுப் பொதுக் கூட்டம் பற்றிய விவரங்களை 7 நாள்களுக்கு முன்னதாக உறுப்பினர்களுக்கு அறிவிக்க வேண்டும். கிளை ஆண்டுப் பொதுக் கூட்டத்துக்கான 30 பிரதிநிதிகளை இவ்வாண்டுப் பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்தல் வேண்டும்.)

- கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4161)


# வெளிநாட்டு / உள்நாட்டு துரித தபால் சேவை

ஜிலானி முகவர் தபால் நிலையம் T.N.T. COURIER நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் T.N.T. துரித தபால் சேவையை யாழ்ப்பாணத்திலும் ஆரம்பித்துள்ளது என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதன் மூலம்—

உள்நாட்டு, வெளிநாட்டு
தபால்கள் / ஆவணங்கள்
என்பன மிக விரைவாக அனுப்பிவைக்கப்படும்.

தபால்கள் பெற்றுக்கொள்ளும் இடங்கள்:

**ஜிலானி முகவர் தபால் நிலையம்**
இல. 12, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்,

**குமரன் விடுதி**
ஜிலானி முகவர் தபால் நிலையம்
இல. 67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/4135)


# அஞ்சலியின்பின் சடலங்கள் நேற்று தகனம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

மட்டுவில் பகுதியில் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட ஈ. பி. டி. பி. உறுப்பினர்களான குணசீலன், காளிதாஸ் ஆகியோரின் சடலங்கள் நேற்று ஊர்காவற்றுறையில் தகனம் செய்யப்பட்டன.

இருவரின் சடலங்களும் ஈ. பி. டி. பியின் யாழ். அலுவலகத்தில் நேற்று வைக்கப்பட்டு, மக்கள் அஞ்சலி இடம்பெற்று தகனம் செய்யப்பட்டது. (இ-3)

## டக்ளஸின்...

(முதலாம் பக்கத் தொடர்)

முடியும் என வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை சிறைச் சாலையில் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த தமிழ் கைதிகளின் நிலைமையை நேரில் அறிய அங்கு சென்ற சமயம் டக்ளஸ் தேவானந்தா தாக்கப்பட்டது தெரிந்ததே.

தலையில் மண்டையோடு முடியும் இடத்தில் பின் கழுத்து ஆரம்பிக்கும் பகுதியில தாக்கப்பட்டதால் அவரது மூளையில் இரத்தக்கட்டிகள் ஏற்பட்டதாகவும்—

நேற்று முன்தினம் 4 மணி நேரம் மேற்கொள்ளப்பட்ட நரம்பியல் சத்திர சிகிச்சை மூலம் அந்த இரத்தக் கட்டிகள் அகற்றப்பட்டதாகவும்—வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

செயற்கைச் சுவாசம் வழங்கப்பட்டு வருவதாகவும், நவீன கம்பியூட்டர் கருவிகள் மூலம் அவரது நாடித்துடிப்பு கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

அவரது சுவாச, இருதய செயற்பாடுகளை கவனிக்கும் கருவிகள் நாளை காலை அகற்றப்படும் என்றும்—

அதன் பின்பே அவரது உடல் நிலை குறித்து சரியான தகவல்களை வெளியிட முடியும் என்றும்—வைத்திய நிபுணர்கள் தெரிவித்தனர்.

நேற்று மாலை 6 மணியளவில் அவர் ஓரளவு சுவாசிக்கக்கூடிய நிலையில் இருந்தார் என்றும்—

ஆனால் உடல் நிலை மோசமான நிலையிலேயே இருந்ததாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

டக்ளஸ் தேவானந்தாவை வெளிநாட்டுக்கு அதாவது சிங்கப்பூர் அல்லது லண்டனுக்குக் கூட்டிச் சென்று சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வைத்திய நிபுணர்களுக்கு ஆலோசனை தெரிவித்ததாகவும்—

அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்து வெளியே கொண்டு செல்ல முடியாத நிலையில் உள்ளவரை வெளிநாட்டுக்கு கொண்டு செல்ல முடியாது என்று வைத்திய நிபுணர்கள் தெரிவித்ததாகவும்—ஒரு தகவல் தெரிவித்தது.

அதேநேரம்—தேவானந்தாவின் தலையில் துப்பாக்கிச் சன்னங்கள் இருக்கலாம் என்ற சந்தேகம் வைத்திய வட்டாரங்களில் எழுந்துள்ளதாகவும்—

ஆனால் அதை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை என்றும் — மற்றொரு செய்தி தெரிவித்தது.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, மங்கள சமரவீர, பௌசி ஆகியோர் தேவானந்தாவைப் பார்வையிட்டதுடன் தேவையான உதவிகளையும் செய்து வருகின்றனர்.

அமெரிக்க, இந்திய பிரதித் தூதுவர்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்களைச் சேர்ந்த ராஜதந்திரிகளும் நேற்று டக்ளஸைச் சென்று பார்த்தனர். (இ-3-6-10-21)

# மலையக மக்கள் முன்னணி தனித்துப் போட்டியிடும்

கொழும்பு, ஜூலை 2

தெற்கு மாகாண சபைகளுக்கான தேர்தலில் பிரதி அமைச்சர் சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளது.

மத்திய, ஊவா மாகாண சபைகளுக்கு அந்த முன்னணி நாளை வேட்பு மனுத் தாக்கல் செய்யும்.

அதேநேரம்—மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் பதவியில் இருந்து விலகிய காதர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவுக்கு எதிரான மனுவை இன்று மலையக மக்கள் முன்னணி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# நாவலடியில் மின் கோபுரங்கள் தகர்ப்பு

மட்டக்களப்பு, ஜூலை 2

மட்டக்களப்பு நாவலடியில் மூன்று மின்கோபுரங்கள் இனந்தெரியாத நபர்களால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன.

கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் இந்தக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டன. (இ-21)

# மிருசுவிலில் 3 படையினர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

தென்மராட்சியில் மிருசுவில் பகுதியில் நேற்று நண்பகல ஒரு மணியளவில் விடுதலைப் புலிகளினால் தயாரிக்கப்பட்ட வெடிப் பொருள் வெடித் தாக்குதலில் 3 படையினர் காயமடைந்து பலாலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் என்று பலாலி இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

நேற்று முன்தினம் காலை 9-40 மணியளவில் உடுவில் பகுதியில் வீதித் துப்புரவுப் பணியில் ஈடுபட்ட சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகளின் வெடிப் பொருள் ஒன்றில் சிக்கியதில்காயமடைந்து பலாலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்தச் சண்டையில் இரு கடற்படையினர் உயிரிழந்தனர்; 4 கடற்படையினரும், 3 பொது மக்களும் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## இரண்டாவது...

(முதலாம் பக்கத் தொடர்)

கோரும் ''பக்ஸ்'' செய்தி ஒன்றை உண்ணாவிரதிகள் நேற்று வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பினர்.

ஆனால் இது குறித்து நடவடிக்கை எடுப்பதாக மட்டும் தெரிவித்து ஆளுநர் அலுவலகத்தில் இருந்து பதில் கிடைத்தது.

இதனால் ஏமாற்றம் அடைந்துள்ள உண்ணாவிரதிகள் இன்று முதல் சுழற்சி முறையில் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தவிருப்பதாக அறிவித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தை ஆதரித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். (இ-3)

## மசகு...

(முதலாம் பக்கத்தொடர்)

கப்பல் அதிகாரி எண்ணெய் விநியோகத்தை நிறுத்தி விட்டார்.

இந்த எண்ணெய்க் கசிவு கொழும்புத் துறைமுகத்திலிருந்து வெள்ளவத்தை வரை சுமார் 7 கிலோ மீற்றர் வரை நீருடன் கலந்துள்ளது. இக்கப்பலி 80 ஆயிரம் தொன் எண்ணெய்இருந்தது. (இ-6)

## புறக்கோட்டை..

(முதலாம் பக்கத்தொடர்)

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனையோர் விடுவிக்கப்பட்டனர். (இ-3-164)

## டக்ளஸுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

கொண்டு தயாரித்த ஒரு கூரிய ஆயுதத்தை தாக்குதலுக்கு அவர்கள் பயன்படுத்தினர்.

இதற்கு முன்னும் பல தடவைகள் அவரது உயிரைப் பறிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்கள்.

அனேகமாக ஒரே கும்பலைச் சேர்ந்தவர்கள் தான் இத்தகைய செயலில் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள்.

இப்படி அவர் கூறினார். (இ-10-6)

## ஜனாதிபதியின் ..

(முதலாம் பக்கத்தொடர்)

பாடு செய்த போதே அவர் கூரிய ஆயுதத்தாலும், பொல்லுகளாலும் தாக்கப்பட்டதாக விசாரணைகளில் தெரிய வந்தது.

நிலத்தில் உட்கார்ந்து அவர் கதைத்துக் கொண்டிருந்த சமயம் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் அருகில் இருந்தார். சிறைக்காவலர்கள் துப்பாக்கிகளுடன் நின்றனர்.

சிறைக் கைதிகள் கூரான ஆயுதத்தால் தேவானந்தாவைத் தாக்கியதும், அவர் கீழே சரிந்ததாகவும், அச்சமயம் சிறைக்காவலர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இத்தாக்குதல் சம்பவத்தில் எட்டுக் கைதிகள் சிறுகாயங்களுக்கு உள்ளாகி சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம் — இந்த சம்பவம் தொடர்பாக களுத்துறை பொலீஸ் அத்தியட்சகர் தலைமையிலான பொலீஸ் குழுவும், இரகசியப் பொலீஸ் குழுவும் தனித்தனியாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

இந்தச்சம்பவம் தொடர்பாக மூன்று தமிழ்க்கைதிகள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் —

விசாரணைகளுக்குஏனைய கைதிகள் ஒத்துழைப்பு வழங்காத காரணத்தால் உண்மையானவர்களைக் கண்டுபிடிப்பதில் கஷ்டநிலை ஏற்பட்டுள்ளதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

அங்கு தேடுதல் நடத்திய பொலீஸார் இரத்தம் தோய்ந்த 4 கூரான இரும்புக்கம்பிகளையும், வெற்றுத் தோட்டாக்களையும் கைப்பற்றியுள்ளனர்.

அங்கு பணியாற்றிய 10 சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் பல கைதிகள் ஆகியோரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம் — கொழும்பு பொது வைத்தியசாலையில் தேவானந்தா சிகிச்சை பெறும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுப் பகுதிக்கு பொலீஸ்மா அதிபரின் ஏற்பாட்டில் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (இ-3-6-10-21)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02-07-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org